# ஜகன்மோகினி

1—6—1949. 26-வது ஆண்டு. அணா நான்கு

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JUL 1949
MADRAS

மேலட்டைப் படம்.　　　　　　　　　　சறுக்கல் குதூகலம்.

மாலைப் பொழுதினிலே ஒருநாள் கடற்கரையினிலே!

—போட்டோ: ஸ்ரீ. S. T. P. ஸாரதி, திருவல்லிக்கேணி.


## வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபாரதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு

அணா. 6.
உளுத்த இதயம்

## வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4.
2. மதமா, மனமா? 1-4.
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1-8.
4. ராணி சிலாவதி 1-0.

**தாரண நந்தவனம**
(700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த ருதுமலர் மாலை ரூ. 9.

## ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம்.

ப்ர. ப. அண்ணங்கராசாரியர் உரையுடன் பாராயண பதிப்பு 1-0

## இதுவும் ஒரு காந்தி ஸேவையாகும்

திருவல்லிக்கேணி
மஹாத்மாஜி சேவா சங்கத்தின்
மாணவர் இலவசச் சம்பள
நிதிக்கு நன்கொடையளிக்க

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரூ. 3-8-0.
உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனித முறும்; சக்திபெறும். இப் பதிப்பின் லாபம் சங்க இலவசச் சம்பளநிதிக்கே!

ஜகன்மோகினி காரியாலயத்திலிருந்தோ அல்லது மோகினி ஏஜண்டுகளிடமிருந்தோ அல்லது கீழ்கண்ட அன்பர்களிடமிருந்தோ பெற்று இப்புனித கைங்கரியத்தை ஆதரியுங்கள்.

ஸ்ரீ சுத்தானந்த சமாஜம்.
சிவகங்கை.

ஸ்ரீ. D. கோவிந்தராவ்
நூர்மஹால் 1st Floor Room. 9
Plot 541. வின்ஸென்ட்ரோட்
மதுங்கா, பம்பாய் - 19.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
— திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து
— வீராகவ கவி

Vol. 26. விரோதி ஞூ, சுதந்தர சகாப்தம் June.
No. 6. வைகாசி மீ 23-ம் திங்கள். 1949.


## நாட்டின் அங்கீகாரம்

காமன்வெல்த் உறவு பற்றிய லண்டன் ஒப்பந்தத்தை நம் நாடு அங்கீகரித்துவிட்டது. "நேரு எது செய்தாலும் நல்லதுதான் செய்வார், நல்லவிதத்தில்தான் செய்வார்" என்று அவரிடமுள்ள அத்யந்த ப்ரீதி விச்வாசத்தால் வாய் திறவாது ஒப்புக்கொள்ளப்படவில்லை; அரசியல் நிர்ணய சபையிலும் சரி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் சரி, நீண்ட விவாதத்திற்கும் விளக்கத்திற்கும் பிறகே, அனுகூலமான அம்சங்களை உணர்ந்து அறிந்தே, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நேருஜி பின்வரும் விஷயங்களை ஐயமற விளக்க வேண்டியதாயிற்று:—

(1) இந்தியாவின் சுதந்தரத்தைக் குறித்த பழைய பிரதிக்ஞைகளும் வாக்குறுதிகளும் இதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

(2) இதர நாடுகளுடன் நமது இச்சைப்படி ஸ்நேகத்தையோ ஒத்துழைப்பையோ நிர்ணயிப்பதை இது பாதிக்கவில்லை.

(3) நாம் காமன்வெல்த் நாடுகளுடன் சம பாகஸ்தராகச் சேர்வதனாலேயே அந்த நாடுகளின் எல்லாக் கொள்கைகளையும் ஆதரிப்பதாக அர்த்தமேயில்லை: முக்கியமாக, நிறத்வேஷக் கொள்கைகளை எதிர்க்கமாட்டோமென்று அர்த்தமல்ல.

(4) அடுத்த சில வருடங்களுக்குள் நமது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்துகொள்ளாவிடில் உலக அரசியலில் இந்தியாவின் கௌரவம் குன்றிவிடும்; லண்டன் ஒப்பந்தம் நமக்குப் பொருளாதார முன்னேற்றத்துக்கு அனுகூலமான சந்தர்ப்பம் அளிக்கிறது.

(5) காமன்வெல்த் உறவில் இப்புதிய தத்துவப்படி இந்தியா சேர்ந்திராவிடில் ஒருவயதுக் குழந்தையாகிய நம் நாடு பலவிதத்திலும் தனித்துநிற்க நேர்ந்திருக்கும்; இதனால் ஏற்படக்கூடிய பிரச்னைகள் அனந்தம்; இப்போதுள்ள உலகநிலையில் அங்ஙனம் தனித்து நிற்பது அனுகூலமல்ல. (இதனால் வல்லரசு—அச்சுகளில் சிக்குவதாக அர்த்தமல்ல.)

(6) ஒருவித நிர்ப்பந்தமுமின்றி அனைவரும் ஒன்றுகூடி உருவாக்கியுள்ள இந்த ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கு அனுகூலம் உண்டே தவிர, பிரதிகூலம் எதுவும் கிடையாது. இதை [illegible]த்து


செய்யவேண்டுமென்று நம்மக்கள் எப்போது தீர்மானித்தாலும், அவ்வாறே செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு.

ராஜன்பாபு இந்த ஒப்பந்தத்தை மஹாத்மாஜியின் அஹிம்ஸா தர்மத்திற்கு ஒரு புதிய அதிசய வெற்றி என்று கூறலாமென்றார். ஏனென்றால், பழைய பகைமையை அடியோடு மறந்து சிறிதும் கசப்பின்றி அன்புடன் சம அங்கத்தினராகும் விதத்தை காந்திஜியிடமிருந்து கற்றுள்ளோமல்லவா?

"கடவுளும் எமது உரிமையும்" என்று இதுவரை இருந்துவந்த சக்ரவர்த்தியின் சர்க்கார்—சின்னம் இனி "ஸத்யம் ஏவ ஜயதி"—உண்மை ஒன்றே ஜயிக்கும் என்ற காந்திய மக்கள்—சர்க்காரின் சின்னமாக மாறுகிறது. ஸத்யமே கடவுள்: ஸத்தியத்தின் வெற்றியே நமது வெற்றி.

—வை. மு. ஸ்ரீ.

---




## 4. ஆசாரம் எது? தீண்டாதார் யார்?

ஆட்கொண்டவில்லி கோவிந்தாசாரியார் என்ற ஸ்ரீவைஷ்ணவப் பெரியாரை நான் இளைஞனாக இருந்தகாலத்தில் தரிசித்து அறிந்து கொள்ளும் பேறுபெற்றேன். அந்நாளில் தமிழகத்தின் தெற்குக் கோடியான திருநெல்வேலி ஜில்லா வைதிகக் கோட்டையாகவும் வைதிக எதிர்ப்புப் பீரங்கிகளின் போரரங்காகவும் ஒருங்கே காட்சியளித்தது. ஹரிஜனப்பிரசினை அன்று அவ்வளவாக இல்லை; சாதி சமயப் பூசல்களும் ஆரிய திராவிட வசல்களும் மலிந்திருந்தன. அத்தகைய திருநெல்வேலியை ஆட்கொள்ள வந்ததுபோல வந்த ஆட்கொண்டவில்லியாரையும் அவருடைய அருமைச் சீடரான திருநாராயண பார்கவரையும் வரவேற்க நேர்ந்தது, ஒரு விசிஷ்டாத்வைத மகாநாட்டை முன்னிட்டு. சீடரைத் 'திருக்குலத்தார்' என்று ஆசாரிய ஸ்வாமி அறிமுகப்படுத்திவைத்தார்.

### திருக்குலத்து மெய்யடியார்

திருநெல்வேலி திகைத்தது, நாற்பாற்குலமும் நகைத்தது, [illegible]ரமும் பகைத்தது; பரிகசித்தது. 'திருக்குலத்தார்'

என்றால் ஸ்ரீவைஷ்ணவபரிபாஷையில் ஹரிஜனவகுப்பினர். 'தீண்டாதார்' என்று ஒதுக்கப்பட்டவர்களை முன்னேற்றுவதற்கு ஒரு மனோதத்துவ அடிப்படையாக ஹரிஜனப்பெயர் சூட்டினார் கருணைக் கடலான காந்தியடிகள். தாழ்ந்தார் பொருட்டு 'ஐயோ' என்று முகங்காட்டி இரங்கிய கருணைக்கடல் இராமனுஜர் இந்த ஜனங்களை அந்நாளில் 'திருக்குலத்தார்' என்றார்.

ஆட்கொண்டவில்லியார் சிஷ்யரத்தினத்தை அறிவிப்பதற்கு முன், 'திருக்குலத்தார்' என்று தெரிந்துகொள்ளும் ஆற்றல் வைதிகத் திருநெல்வேலிக்கும் இல்லை; அவைதிகத்திருநெல்வேலிக்கும் இல்லை. அறிமுகப்படுத்திய பின்போ— அந்த முகத்தைக்கண்டு பயந்தது போலவா, வெட்கம் அடைந்ததுபோலவா என்பது ஞாபகம் இல்லை— 'ஆசாரம்' தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு மெள்ளப் பின் வாங்கி நழுவிவிட்டது. அநாசாரமோ 'இதுவும் ஒரு பொல்லாத சூழ்ச்சி' என்றது.

மகாநாட்டுப் பந்தலில் அக்கிராசனர் ஸ்ரீ. கோவிந்தாசாரிய ஸ்வாமி திருநாராயணதாசரை அருகே அழைத்துவைத்துக்கொண்டதும் சபை திடுக்கிட்டது. தலைவரோ அமைதியாக, இனிமையாக இளநகையரும்பியவண்ணம் எழுந்துநின்று, 'இந்தத் தாசரின் உள்ளத்திலே ஒரு ஸத்பிராம்மணன் குதிபோடுகிறான்!' என்று சொல்லிவிட்டு, 'பெரியோர்களே! நெஞ்சிலே கைவைத்து "இப்படி அங்கே ஒரு ஸத்பிராம்மணன் குடியிருக்கிறானா?"—சொல்லுங்கள் தயவுசெய்து' என்றார். பிறகு அப்பெரியார் தம் போர்வைமீது நெஞ்சுக்கு நேரே கைவைத்துக்கொண்டு, 'என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லையே—"நீசனேன், நிறைவு ஒன்றும் இலேன்!" 'இறைவா! சரணம்' என்றார், வழிந்த கண்ணீருடன்.

அன்று கண்டேன் ஒரு ஸ்ரீவைஷ்ணவ ஆசாரசீலரை. சபை நடுங்கியதா, உருகிப்போயிற்றா? —அதுவும் ஞாபகம் இல்லை. நான் பரவசமானேன். அந்த ஸ்ரீவைஷ்ணவம் தீண்டத்தகாத என் நெஞ்சையும் தொட்டது. இராமாநுஜர் காலமும் கோஷ்டிகளும் மனக்கண்முன் ஓடிவந்தன.

அந்நாளில் —ஏன், இந்நாளிலும்தான்— ஆசாரம் என்பது 'தொடாதே, தீண்டாதே' என்பதுதான்; புறத்தூய்மைதான்; வேஷம்தான், கோஷம்தான். நவநாகரிக உலகில் 'பாஷன்' (fashion) போலே. அன்று ஒதுக்கி ஒடுக்கியதுபோய், இன்று ஒதுங்கி ஒடுங்கி வாழநேர்ந்திருக்கிறது. ஆட்கொண்டவில்லியார் போன்ற ஆசாரியர்கள் காட்டிவந்திருக்கும் பெருநெறிபிடித்துச் சமுதாயம் ஒழுகிவந்திருந்தால், ஹரிஜனப்பிரசினையும் மற்றப் பிரசினைகளும் தீர்ந்துபோய் நாம் எற்கெனவே ஒரு புதுமைப்பெருவாழ்வு பெற்றிருக்கக்கூடும் என்பது சிறியேன் சிந்தனை.

## ராஜரிஷிகளின் கொள்கை

என் உள்ளம் கேட்கிறது: வைதிக விரோதமான உணர்ச்சிகளும் கொள்கைகளும் சமயங்களும் இவ்வளவு தூரம் பரவியிருக்க முடியுமா, ஆசாரத்தின் ஸாரத்தை உணர்ந்து தீண்டாமையை

ஒழிக்க நமது சமயத்தலைவர்கள் அன்றே முற்பட்டிருந்தால்? சரி; ஆசாரம்தான் என்ன?

பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்

[பரிவு - அன்பு; இரக்கம். தழீஇய - தழுவிய. பவித்திரம் - ஆசாரம்.]

என்று கம்பனுடைய ராமன் கங்கைக்கரையிலுள்ள முனிவர்களை நோக்கிச் சொன்னனே, அந்த ஆசாரத்தைத் தமிழகம் அகங் கலந்து தழுவியிருந்தால், 'ஏழை, ஏதலன், கீழ்மகன்' என்று பாராது எல்லாரையும் சகோதரராக்கியிருந்தால், இப்போதுள்ள பகையும் புகையும் ஏசலும் பூசலும் பொறாமையும், எவ்வளவோ குறைந்திருக்கக் கூடுமல்லவா?

கிழவர்களான முனிவர்களை (விருத்தமாதவரை) நோக்கி இளநகையரும்பியவனாய் ராமன் தன்னுடைய ஆசாரக்கொள்கையை வெளியிடுகிறான். 'அன்பும் அருளும் தழுவிய செயல்கள் எவையோ அவை ஆசாரச்செயல்கள்' என்கிறான். முக்கால முழுக்கு வேண்டாம் என்கிறானா? 'முக்கால்முழுக்கு, அரைமுழுக்கு வேண்டாம்; முழு முழுக்கு வேண்டும்' என்கிறான். அன்பு வெள்ளத்திலே அகம் முழுக, முகம்முழுக முங்கிமுங்கி நீராடவேண்டும் என்கிறான். இரக்கம் போய்த் தழுவிக்கொள்வதற்குச் சாதியோ, நிறமோ, சமயமோ, அனுஷ்டானமோ குறுக்குச்சுவராக நிற்கவேண்டாம் என்கிறான் ராமன். இது ராமனைப்போன்ற ராஜரிஷிகளின் தருமம் என்று சொல்லாமல் சொல்லுகிறான் கம்பன்.

ரிஷிகளில் வசிஷ்டரைப்போன்ற பிரம்மரிஷிகள் ஆசார நியமங்கள் என்ற கட்டுப்பாடுகளை மும்முரமாக அனுஷ்டிப்பர். விசுவாமித்திரரைப்போன்ற ராஜரிஷிகளோ ஆசார ஸாரத்தை அன்பு மலரும் அருட்புனலும் கொண்டு வழிபடுவர். பிரம்மரிஷிகளின் தலைவரான வசிஷ்டரின் குருகுலத்திலே, தான் பெற்ற பயிற்சியை ராமன் பூர்த்தி செய்துகொண்டான், ராஜரிஷிகளில் சிறந்த ஒருவரான விசுவாமித்திருடன் விரிந்த உலகம் கண்டு. ஆகவே, பரவல்-மனப்பான்மையுடன் (liberalism) உள்ளதைக் காப்பாற்றிக் கொள்ளும் குவியல்-மனப்பான்மை (Conservatism) யும் கம்ப-ராமனுக்கு உண்டென்று நம்பலாம்.

## சாதியும் நீதியும்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை—'மனோன்மணீயம்' என்ற நாடகத்தின் ஆசிரியர்,—ஒருகாலத்தில் சமுதாயத்தைக்காக்கும் எலும்புச்சட்டமாயிருந்து நாளடைவில் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் உருக்குச்சட்டமாகிவிட்ட வர்ணாசிரம தர்மத்தின்மீது சீற்றங் கொண்டு,

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன்(கு) உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ, மனுவாதி
ஒருகுலத்துக்(கு) ஒருநீதி?

என்று மனுவோடு வள்ளுவரை மோதவிட்டார். ஆனால் அதற்கும் முன்பே கம்பரின் விபீஷணனைக் குறித்து —பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் தேசத் துரோகியாகவும் ராஜத்துரோகியாகவும் கருதப் பெற்ற பெரியோனைக்குறித்துக்— கும்பகருணன்,

நீதியால் வந்ததோரு
நெடுந்தரும நெறிஅல்லால்
சாதியால் வந்தசிறு
நெறிஅறியான் என்தம்பி

என்றுசொல்லித் தீர்த்துவிட்டான் அந்தப்பிரசினையை— ஆம், கம்பனின் கும்பகருணன்— ஏன், கும்பகருணன் வாயிலாகக் கம்பன்தான்.

இதே கொள்கையைத்தான் பாரதியாரும்,

நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று பாப்பாவுக்கும் தெரிவித்திருக்கிறார் தம் பாப்பாப்பாட்டிலே.

'ஆசாரம் எது?' என்ற கேள்விக்கும், 'தீண்டாதார் யார்?' என்ற கேள்விக்கும் ஒருங்கே விடையளித்திருக்கிறார்கள் தேசபக்த மகாகவி பாரதியாரும், பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும், கம்பனும். 'ஒருசாதிக்கு ஒரு நீதி' என்ற கொள்கையை ஸ்ரீவைஷ்ணவமும் ஒப்புக்கொள்ளவில்லையென்பதை நான் அந்நாளிலேயே ஆட்கொண்டவில்லி அண்ணலார் வாயிலாக உணர்ந்துகொள்ளும் பாக்கியம் பெற்றேன்.

'அன்பும் இரக்கமும் தழுவியது ஆசாரம்' என்றும், 'தீண்டத்தகாதது தீவினைதான்; தீவினையாளரையும் தீண்டித் திருத்தவேண்டியதுதான்' என்றும் தமிழ்ப்பெருமக்களின் பேரிதிகாசத்தினிடையே, யானைமேல் பேரிகைகொட்டுவதுபோல் நமது ராமராஜ்ய ஆஸ்தானகவி,

நீதியால் வந்ததோரு
நெடுந்தரும நெறிஅல்லால்
சாதியால் வந்தசிறு
நெறி அறியான்

என்று கும்பகருணன் வாயிலாக விபீஷண குணாதிசயத்தை வியந்தபோது பொதியமலையும் இமயமலையும் குதூகலமாய்க் குதிபோட்டிருக்கவேண்டும், திருநாராயணதாஸருள்ளத்திலே ஸத்பிராம்மணன் குதிகொண்டதுபோலே! முத்திசையிலுமுள்ள கடல்களும் அலைக் குதிகுதித்து முழங்கியிருக்கவேண்டும்.

இந்த மகத்தான நீதிதருமம் அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டால், இந்தியமண்ணும் விண்ணும், மக்களும் தேவரும்—ஒருமுகமாய் ஒரு குரலில் கம்பன் கண்ட கருணைக் கடலுக்குப் பல்லாண்டுபாடிப் பரவசமாவார்கள். ஆம். இராமாவதாரம் என்ற சகோதர தர்ம சாஸ்திரத்திலே கம்பன் காட்டும் அந்த அழகுக் கடவுளுக்குத்தான். இதில் நாஸ்திகர்களுக்கும் சந்தேகம்வேண்டாம் —ஆஸ்திகர்களுக்கும் வேண்டியதில்லையே?

# "திருக்கோளூர்ப் பெண்பிள்ளை"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1. அழைத்து வருகிறேனென்றேனோ அக்ரூரரைப்போலே.
2. அகமொழித்து விட்டேனோ விதுரரைப்போலே.
3. தேகத்தை விட்டேனோ ரிஷிபத்தினியைப்போலே.
4. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப்போலே.
5. பிணமெழுப்பிவிட்டேனோ தொண்டைமானைப்போலே.
6. பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப்போலே.
7. தாய்க்கோலஞ் செய்தேனோ அநசூயையைப்போலே.
8. தந்தை எங்கே என்றேனோ த்ருவனைப்போலே.
9. மூன்றெழுத்து சொன்னேனோ க்ஷத்ரபந்துவைப்போலே.
10. முதலடியைப் பெற்றேனோ அஹலியையைப்போலே.
11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப்போலே.
12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரான்போலே.
13. ஆராய்ந்துவிட்டேனோ திருமழிசையார்போலே.
14. அவன் சிறியனென்றேனோ ஆழ்வாரைப்போலே.
15. ஏதேனுமென்றேனோ குலசேகரர்போலே.
16. யான் ஸத்தியமென்றேனோ கிருஷ்ணனைப்போலே.
17. அடையாளஞ் சொன்னேனோ கபந்தனைப்போலே.
18. அந்தரங்கஞ் சொன்னேனோ த்ரிஜடையைப்போலே.
19. அவன் தெய்வ மென்றேனோ மண்டோதரியைப்போலே
20. அஹம் வேத்மி என்றேனோ விச்வாமித்திரனைப்போலே.
21. தேவுமற்றறியேனென்றேனோ மதுரகவியார்போலே
22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியார்போலே
23. ஆழிமறை யென்றேனோ வசுதேவரைப்போலே.
24. ஆயனை வளர்த்தேனோ யசோதையாரைப்போலே.
25. அநுயாத்ரஞ் செய்தேனோ அணிலங்களைப்போலே
26. அவல் பொரியை யீந்தேனோ குசேலரைப்போலே
27. ஆயுதங்களீந்தேனோ அகஸ்தியரைப்போலே.
28. அந்தரங்கம் புக்கேனோ ஸஞ்சயனைப் போலே.
29. கர்மத்தாற் பெற்றேனோ ஜனகரைப் போலே.
30. கடித்து அவனைக் கண்டேனோ திருமங்கையார்போலே.
31. குடைமுதலானவை யானேனோ அனந்தாழ்வான்போலே.
32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப்போலே.
33. இளைப்புவிடாய் தீர்த்தேனோ நம்பாடுவான்போலே.
34. இடைகழியே கண்டேனோ முதலாழ்வார்களைப்போலே.
35. இருமன்னர் பெற்றேனோ வால்மீகர்போலே.
36. இருமாலை யீந்தேனோ தொண்டரடிப்பொடியார்போலே.
37. அவனுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சிநம்பியார்போலே.
38. அவன் மேனியானேனோ திருப்பாணர்போலே.
39. அனுப்பிவையு மென்றேனோ வசிஷ்டரைப்போலே.
40. அடிவாங்கினேனோ கொங்கிற்பிராட்டியைப்போலே.
41. மண்பூவை யிட்டேனோ குரவநம்பியைப்போலே.

42. மூலமென் றழைத்தேனோ கஜராஜனைப்போலே.
43. பூசக் கொடுத்தேனோ கூனியைப்போலே.
44. பூவைக் கொடுத்தேனோ மாலாகாரரைப்போலே.
45. வைத்திடத் திருந்தேனோ பரதனைப்போலே.
46. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப்போலே.
47. அக்கரைக்கே விட்டேனோ குஹப்பெருமானைப்போலே.
48. அரக்கருடன் பொருதேனோ பெரியவுடையார்போலே.
49. இக்கரைக்கே சென்றேனோ விபீஷணரைப்போலே.
50. இனியதென்று வைத்தேனோ சபரியைப்போலே.
51. இங்குமுண் டென்றேனோ ப்ரகலாதனைப்போலே.
52. இங்கில்லை யென்றேனோ ததிபாண்டனைப்போலே.
53. காட்டுக்குப் போனேனோ பெருமாளைப்போலே.
54. கண்டுவந்தே னென்றேனோ திருவடியைப்போலே.
55. இருகையும் விட்டேனோ திரௌபதியைப்போலே.
56. இங்குபால் பொங்குமென்றேனோ வடுகநம்பியைப்போலே.
57. இருமிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப்போலே.
58. நில்லென்று பெற்றேனோ இடையாற்றூர்நம்பியைப்போலே.
59. நெடுந்தூரம் போனேனோ நாதமுனியைப்போலே.
60. அவன்போனா னென்றேனோ மாருதியாண்டான்போலே.
61. அவன்வேண்டா மென்றேனோ ஆழ்வானைப்போலே.
62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானாரைப்போலே.
63. அருளாழி கண்டேனோ நல்லானைப்போலே.
64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப்போலே.
65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வவாரியாண்டான்போலே.
66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப்போலே.
67. அநுகூலஞ் சொன்னேனோ மாலியவானைப்போலே.
68. கள்ளனிவ னென்றேனோ லோககுருவைப்போலே.
69. கடலோசை யென்றேனோ பெரியநம்பியைப்போலே.
70. சுற்றிக் கிடந்தேனோ திருமாலையாண்டான்போலே.
71. சூழறவுகொண்டேனோ திருக்கோட்டியூரார்போலே.
72. உயிராயப் பெற்றேனோ ஊமையைப்போலே.
73. உடம்பை வெறுத்தேனோ திருநறையூராரைப்போலே.
74. என்னைப்போ லென்றேனோ உபரிசரனைப்போலே.
75. யான் சிறியேனென்றேனோ திருமலைநம்பியைப்போலே.
76. நீரில் குதித்தேனோ கணபுரத்தாளைப்போலே.
77. நீருகங் கொண்டேனோ காசிசிங்கனைப்போலே.
78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப்போலே.
79. வாயிற்கை யிட்டேனோ எம்பாரைப்போலே.
80. தோள்காட்டி வந்தேனோ பட்டரைப்போலே.
81. துறைவேறு செய்தேனோ பகவரைப்போலே.


"இத்தகைய மகாநுபாவர்களில் ஒருவருடைய ஞானமாவது அடியேனுக்குண்டாகில் இங்கு திருக்கோளூரில் இருக்கலாம்; அந்த ஞானம் அடியேனுக்கில்லை, முயல் புழுக்கை வயலிலே கிடந்தென், வரப்பிலே கிடந்தென்? தேவரீர் எழுந்தருளி மங்களா

சாசனம் செய்தருளினால் வைத்தமாநிதிக்கும் மதுரகவிகளுக்கும் ஸகல உத்ஸவாதிகளும் உண்டாகும்" என்று எம்பெருமானாரிடம் விண்ணப்பித்துக்கொண்டாள் திருக்கோளூரம்மாள்.

அனைத்தையும் திருச்செவிசாத்தி, மிகவும் உகந்தருளின ஸ்ரீ ராமாநுஜர் அவளது திருமாளிகைக்கு எழுந்தருளி அவளைக் கௌரவித்தார். அவள் செய்த தளிகையைத் தாம் அமுது செய்து, பிரஸாதமும் ஸ்ரீ பாத தீர்த்தமும் ஸாதித்தருளினார்! என்னே அம்மாதரசியின் பாக்கியம்!

[அவள் விண்ணப்பித்துக்கொண்ட 81 விஷயங்களில் (73 என்பர் சிலர்) பொதிந்துள்ள இதிகாஸ, புராண, ஸம்பிரதாயப் பொருள்கள் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து ஸாரமாக வெளிவரும்.]

---




## இவளும் அவளும்

[யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய நாடகம். அணா 10. புதுயுக நிலையம், புதுச்சேரி.]

"நாடகத்தால் நாடும் வீடும் நலம்பெறும்; அரிய சீர்திருத்தங்கள் எளிதில் இயலும்" என்ற முறைக்கேற்ப ஆண்பெண் வாழ்வு எப்படி இருக்கவேண்டும், எப்படி இருக்கக்கூடாது என்பதைத் தெளிவாகக் காட்டும் சீர்திருத்த நாடகமாக இதை அமைத்துள்ளார் கவியோகி.

நவநாகரிகத் தீமைகளெல்லாம் உருவெடுத்த கணவன்; கொடுமையின் ரூபம் மாமியார்; கருமித்தனத்தின் அவதாரம் மாமனார்—இவர்களிடையே கற்பரசியும் தேசபக்தையுமான கதாநாயகி. இவள் வாழ்வைக்கெடுக்க சினிமாவேசி தோன்றி காமநடனம் புரிகிறாள்.

கணவனை உயிர்போல நேசிக்கும் கதாநாயகி, "கணவனைத் திருத்த எனக்கு உரிமையுண்டு: குணத்தை மதிப்பேன். கொடுமையை எதிர்ப்பேன். அவர் கணவர், நான் மனைவி என்பதை மட்டும் மறக்கமாட்டேன்...பெண்மையின் சக்தியால் அவரைத் திருத்தவே முயல்வேன்" என்று ஸங்கல்பிக்கிறாள். நடப்பதென்ன?— படித்து மகிழுங்கள்.

தமிழ் நாடகக்கலையில் சுத்தானந்தர் இப்போது கருத்தூன்றியிருப்பது மகிழத்தக்கது. பெண்சக்தியைச் சிறப்பிக்கும் இந்நாடகம் புதுவை மகளிர்க்கழகப் பெண்மணிகளால் அரங்கேற்றப் பெற்றமை இரட்டிப்பான மகிழ்ச்சியை யளிக்கிறது. இந்நூலின் விற்பனை முழுதும் நாடகத்தமிழ் வளர்ச்சிக்கே ஆகுமென்று கவியோகி அறிவித்துள்ளதை கலாரஸிகர்கள் கவனித்து, அன்பும் ஆதரவும் தந்து, இன்னும் பல நாடகங்கள் அரங்கேறி உலாவ ஊக்குவார்களாக!

—வை. மு. ஸ்ரீ.



# ஆத்ம சோதனை

★

கவியோகி
சுத்தானந்த பாரதி

★

## II வளர்ந்த கதை

### 12. சிவகங்கையின் வீரப்புகழ்

சிவகங்கை எனது ஜீவகங்கை. தென்னிந்திய வரலாற்றில் அது புகழ் பெற்றது. இது வீர மறவரின் புரட்சிக் கோட்டை. தமிழ்ப்புலமையின் சங்கமாளிகை. சோழனுல்நாடுகடத்தப் பெற்ற கம்பர் சிவகங்கை மறவர் பாதுகாப்பில் கவிச்சக்கரவர்த்தியாக வாழ்ந்தார். சிவகங்கைக்கு நாலுமைல் தூரத்தில் உள்ள நாட்டரசன்கோட்டை அந்தப் பாட்டரசன் கோட்டையே. கம்பர் சமாதி இன்று அங்கே விளங்குகிறது. வேம்பத்தூர் பிச்சுவையர், கவிகுஞ்சரி பாரதியார், வில்லியப்பக்கவிராயர், இராமலிங்கப் புலவர், தெய்வசிகாமணிப்புலவர் போன்ற அறிஞர் சிவகங்கையில் விளங்கினர். இராமதாஸ்பாகவதர், தசரத ராமபாகவதர், நரசிம்ம பாகவதர் போன்ற கதாநிதிகள் இங்கே வாழ்ந்தனர். இராமேசுரம் செல்லும் பெரியார்கள் அனைவரும் அந்தக்காலம் சிவகங்கை சத்திரத்தில் தங்கியே செல்வர். சிறுவயதில் எனக்கு வழிகாட்டிய பலபெரியோர்களை நான் இந்தச் சத்திரத்தில் சந்தித்தேன்.

பதினெட்டு வயதுவரையில் நான் சிவகங்கையிலேயே வளர்ந்தேன். அதன் காற்றும் கதிரும் நீரும் மண்ணும் ஒலியும், பாட்டும் மனிதர் இயல்பும் எனக்குக் கலைக்களஞ்சியமாக உதவின. இரண்டுவயது முதல் நான் கண்டது கேட்டதெல்லாம் எனக்கு நினைவிருக்கிறது.

சங்ககாலம் முதல் மதுரைக்கும் தொண்டிக்கும் சிவகங்கை ரஸ்தா வழியாகப் போக்குவரத்து நடக்கிறது. நான் அடிக்கடி

இந்த வழியே கால்நடையாகவும் கட்டைவண்டியிலும் சென்ற துண்டு...வண்டி கொடிகளில் இறங்கி 'படக்' என்ற மண்டை முட்டினாலும் பரவாயில்லே; "சந்தைவண்டி குட்டுக்குச் சந்தனத் தேவன் தெம்மாங்கு மருந்து" என்பதுண்டு. வண்டிக்காரர் மதுரை வண்டியூர் தெப்பக்குளத்தில் மாட்டைப் பூட்டுவார்; மண லூரில் தெம்மாங்கு தொடங்கும்...செம்பனூர் வந்ததும் கண்மயங் கும்; தெம்மாங்கு மட்டும் உறங்காது...நூறு வண்டிகள் சேர்ந்து புறப்படும்போது பத்து இருபது வண்டிகளிலிருந்து தெம்மாங்கு வந்துகொண்டேயிருக்கும்...

தண்டை சிலம்பு சலசலக்க
சந்தனம் வாராண்டீ மணமணக்க
எல்லாரும் ஏறும் வண்டி
ஏழைக்கேற்ற கட்டை வண்டி
சந்தனம் ஏறும் வண்டி
சரியான போட்டி வண்டி (தண்)
எல்லாரும் கட்டும் வேட்டி
ஏழைக்கேற்ற கம்பி வேட்டி
சந்தனம் கட்டும் வேட்டி
சரியான சரிகை வேட்டி (தண்)

இப்படியே சந்தனத்தேவன் புகழைப் பலகுரல்கள் பாடும்... சிவ கங்கைக்கு வண்டிகள் வரும். அப்போது வண்டிக்காரர் தெம் மாங்கு எங்கள் வீட்டிற்குக் கேட்கும் :

சிங்க மறவர் வாழும் சிவகங்கைச் சீமையிலே
தங்கம் போல் வாழ்வோமடீ தாழ்வொன்றும் இல்லையடீ
தன்னானே தன்னானே தளுக்குத் தங்கம்.
மானோடும் காட்டினிலே மாம்பழத் தோட்டத்திலே
தேனோடும் தென்றல்வந்து சிலுசிலென வீசுதடீ.
தேரோடும் வீதிகளும் சிவபெருமாள் சந்நிதியும்
காரோடும் வீடுகளும் கண்குளிரக் காண்போமடீ.
சத்தரமும் சாவடியும் தாமரை வாவிகளும்.
முத்துநகை வீசுகின்ற முகமலரும் காணுதடீ.
கத்திவிளை யாட்டுகளும் கம்புவிளை யாட்டுகளும்
குத்துவிளை யாட்டுகளும் கூத்துடனே காண்போமடீ.

இப்படிப் போக்குவண்டிக்காரர்கூடச் சிவகங்கையின் பெரு மையை நாடெங்கும் பாடினர். சிவகங்கை மறவர் அறநிலம். தென்னிந்திய சரித்திரத்துடன் அதன் விதியும் மதியும் கதியும் பின்னப்பட்டிருக்கிறது. முன்னே சிவகங்கை சேதுசமஸ்தானத் தின் பங்காயிருந்தது. விசுவநாத நாயக்கர் காலத்தில் தளவாய் ஆரியநாதமுதலியார் பாண்டிநாட்டை எழுபத்திரண்டு பாளையங் களாக வகுத்துப் பலப்படுத்தினர். சேதுயாத்திரை போகும் பிரயாணிகளைக் காக்கவும், அங்கே அமைதிநாட்டவும் இராமநாத புரம் மறவர் தலைவனைச் சேதுபதியாக்கினர். முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் சேதுராஜ்யம் எழுந்தது. சிவகங்கை புதுக் கோட்டைஎல்லாம் இராமநாதபுரம் சேதுசமஸ்தானத்திற் சேர்

திருந்தன. தொண்டைமான் சேதுபதிக்கு வாட்பணிபுரிந்தனர். ஒருதரம் தஞ்சைப்பகைவன் யானையைத்தந்திரமாக ஓட்டிக் கொண்டு இராமநாதபுரத்திற்கு வந்தான். உட்கலகங்களை அடக்கத் துணைசெய்தான். அதற்காக சேதுபதி அவனுக்கு புதுக்கோட்டை யைத்தந்தான். நாயக்கமன்னரும் தொண்டைமானின் போர்த் தொண்டிற்காக சில நிலங்களைத்தந்தனர். எல்லாம் சேர்ந்து புதுக் கோட்டை சமஸ்தானமானது. தொண்டைமானின் தங்கை கத விஜய கிழவன் சேதுபதி மணம்புரிந்தான்.

சிவகங்கை மறவரும் சேதுபதிக்கு வலதுகைபோல் உத வினர். நவராத்திரியின்போது தமது வீரவரிசைகளைக்காட்டினர். புலிசிங்கத்தைக்கூடப் பொருது வெல்லும் ஆற்றல்படைத்த இந்த வீரர் வீரத்தை மெச்சாத மன்னரில்லை. எங்கே கலகம் கிளம் பினும் மறவர் அதை அடக்கத் துணைசெய்து சேதுபதிக்கு வெற்றி யளித்தனர். நாலுகோட்டைசசிவர்ண பெரியஉடையாத்தேவர் வீராதி வீரர். அவர் இராமநாதபுரத்தில் எழுந்த உட்கலகத்தை அடக்கி குமார முத்துவிஜயரகுநாதசேதுபதியை அரியணையில் வைத்து முடிசூட்டினர். அன்று பல வீரச்செயல்களைக்காட்டினர். சேது பதி மிக்க மகிழ்ச்சியடைந்து, தேவருக்கு அகிலாண்டேச்வரியை மணம்புரிந்து, தனது அரசில் ஐந்தில் இரண்டு பங்கும் சாசனம் செய்து அளித்தார். இந்தப்பங்குதான் (கி.பி. 173)-ல்) சிவ கங்கை ஜமீனாக எழுந்தது. சிவகங்கை தென் எல்லையில் இன்னும் அகிலாண்டேச்வரி சத்திரம் உள்ளது. சிறுவயதில் பெரியஉடை யாத்தேவருக்கு ஒரு முனிவர் ஆசியும் கிடைத்தது. சசிவர்ண பெரியஉடையாத்தேவர் இருபதாண்டுகள் சிவகங்கையை ஆண்டு, அதை உருவாக்கி, மகன் முத்துவடுகநாதத் தேவரிடம் தந்து சென்றார். இவர் 1750—1772 இருபத்திரண்டாண்டுகள் வீரவாழ்வு வாழ்ந்தார். அந்தக்காலச் சரித்திர நிகழ்ச்சிகளில் இவர் பெயர் விளங்குகிறது.

இச்சமயம் மதுரைநாயக்கர் ஆட்சி அஸ்தமித்துக்கொண் டிருந்தது. மங்கம்மாள் பேரன் விஜயரங்கசொக்கநாதன் திருச்சிப் பாசறையில் இறந்தான். மராடியரும் நவாபும் ஊரைவளைத்துக் கொண்டனர். நாயக்கரின் இளம்விதவை மீனாட்சி ஆட்சிபுரிந் தாள். அவளைச்சுற்றி ஒற்றரும் சதிகாரரும் சூழ்ச்சி செய்தனர். அவள் சிவகிரிப் பாளையக்காரனை பங்காருதிருமலையின் மகன் விஜயகுமாரனைத் தத்தெடுத்துக்கொண்டாள். வந்தது கேடு. 'பெண்பிள்ளை நாட்டை ஆளுவதாவது, பட்டம் என் மகனுக்கே... நானே ஆளுவேன்' என்று கிளர்ச்சிசெய்தான் பங்காரு. அவன் சிவகங்கை மறவர் உதவியை நாடினான். மறவர் மறுபடியும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் நாட்டித் தமிழ்ப்பண்பையும், தமிழர் சுதந்தரத்தையும் காக்க முனைந்தனர். மீனாட்சிபக்கம் அவன் தமயன் பெருமாள் நாயக்கன் இருந்து பங்காருவை எதிர்த்தான். உட்போர் வலுத்தது. வெளிப்பகைவர் புகுந்தனர்.

இந்தக்காலம் மராடியர் தாக்குதலாலும் நாதிர்ஷா படை யெடுத்ததாலும் தில்லிபாதுஷாவின் அரியணை ஆடிப்போனது.

சுல்தான் முகமதுஷா நாட்டைப் பல சுபாக்களாக வகுத்து, சுபாக்களை நவாபிகளாக வகுத்து அதற்குத்தலைவர்களை நியமித்து, முறையாக ஆளப் பார்த்தான். ஆனால், தனிக்காட்டு ராசாக்கள் கிளம்பிக் கலகம் விளைத்தனர். ஆற்காட்டு நவாபு தோஸ்தாலி ஐதராபாது சுபேதாருக்குக் கப்பம் சரியாகக்கட்டவில்லை; சுபேதார் தில்லிபாதுஷாவுக்குக் கப்பம்கட்டமுடியாது கொட்டாவிவிட்டான். ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்தனர். தோஸ்தாலி தன்மகன் ஸப்தாலியையும் மாப்பிள்ளை சந்தாசாகெபையும் கிஸ்திவசூலுக்காகத் தெற்கே அனுப்பினான்; மறவரிடம் சல்லிபெயரவில்லை. பங்காருதிருமலை முப்பது லட்சம் ரூபா தந்து சந்தாசாகெபின் படையுதவியைப் பெற்றான். சாகெபு திருமலையைத்தூக்கி அரியணைமேல் வைத்தான். மீனாட்சி ஒருகோடி ரூபாதந்து சந்தாசாகெபை வசப்படுத்தினாள். அந்தப்பேர்வழி பங்காருவை அம்மையநாயக்கனூரில் முறியடித்து, மீனாட்சியை அரியணையேற்றினான். பங்காரு சிவகங்கைக்கு ஓடிப்போய்ச் சூழ்ச்சிசெய்தான். உட்கலகம் எழுந்தது. சந்தாசாகபு திடீரென்று புகுந்து மீனாட்சியைச் சிறையிட்டு மதுரையைக் கைப்பற்றினான்—எல்லாம் துரோகிகளின் நாசவேலையால்! மீனாட்சி சிறையில் நஞ்சைஉண்டு இறந்தாள். நாயக்கர் ஆட்சி அத்துடன் ஓய்ந்தது. உள்நாட்டில் குழப்பம் வலுத்தது. சிவகங்கை மறவர் இனித் தென்னிந்தியாவில் அன்னியர்கொடி ஆடாது காக்கத்தலைப்பட்டனர். கிஸ்திக்குவந்த நவாபு படைகளைத் திருப்பி ஓட்டினர்.

ஐதராபாதில் 1748ல் குழப்பம் வலுத்தது; அந்தக் குழப்பம் ஆற்காட்டையும் பிடித்தது. ஊடேபுகுந்த வெள்ளையர்கை மேலோங்கியது. பிரெஞ்சு தூப்ளேயும், ஆங்கில கிளைவும் தென்னாட்டில் கொடிபோடப் போட்டியிட்டனர். சந்தாசகெபு பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து ஐதராபாதில் முஜபர் ஜங்கை நவாபாக்கினான்; தெற்கே அன்வாருதீனை ஆம்பூரில் வீழ்த்தி, தானே ஆற்காட்டு நவாபானான். அன்வாருதீன் மகன் முகம்மதலி திருச்சிக்கு ஓடி கிளைவைச்சரணடைந்தான். கிளைவ் ஆற்காட்டை முற்றுகையிட்டு நம்மவர் அருந்துணையால் கைப்பற்றி பிரிடிஷ்கொடியை நாட்டினான். சந்தாசகெபு பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து முயன்றும், பயனில்லை; அவனுக்கு சிவகங்கை மறவரும் துணைநின்றனர்; புதுக்கோட்டை தொண்டைமான் பிரிடிஷ்பக்கமே நின்றான். முத்து வடுகநாதத்தேவர் வீரர்களை புதுச்சேரிக்கு அனுப்பித் தற்காலப் போர்க்கலையில் தேர்ச்சி பெறச்செய்தார். திருச்சியில் புகுந்த சந்தாசாகெபை துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். ஆங்கிலேயர் கொன்றனர்.

கிளைவ் முகம்மதலியை ஆற்காட்டு நவாபாக்கினான். நவாபு கிஸ்திவசூலுக்கு அண்ணா மகபூக்கானை அனுப்பினான். மறவரிடம் பலிக்கவில்லை. கும்பினிக்காரரிடமே அந்த வேலையை விட்டான். அவர்கள் யூசப்கான் என்ற தமிழ் முஸல்மானை நியமித்தார்கள். படைச் செலவுதான் மிச்சம். பாஞ்சாலம்குறிச்சி சிவகிரி, சிவகங்கை, ராமநாதபுரம் வீரர் கும்பினிக் கொடியை மதிக்கவேயில்லை.

சுதந்தரக்கொடி நாட்டி ஆண்டனர். "நாயக்கர் அரசை நாமே வகிக்கிறோம் நமக்கே கப்பம் கட்டும்" என்று முனைந்தான் மராடிய துளஜாஜி; "சை! அவனுக்குக் கப்பமா...எனக்கே" என்று வந்தான் நவாபு...கும்பினிக்காரர் "நாம் கொடிநாட்டினோம், எமக்கே கப்பம்" என்றனர். மூவரும் மறவர் சீமையைப்படையெடுத்து நிர்த்தூளி செய்தனர். சிவகங்கைக்குப் பெருவாரியான போர்ச்செலவு; அதனால் அது கடனாளியானது. என்றாலும், வீரக்கடமையில் சிறிதும் குன்றவில்லை. 1772ல்-தொண்டைமான்— நவாபு, கும்பினிப் படைகளுடன் ஜோஸப் ஸ்மித் சிவகங்கையைத் தாக்கினான். இக் காலம் மூன்று வீரர் அன்னியரை விரட்டியடிக்கச் சுதந்தரக்கொடி பிடித்துப் போர்முனையில் குதித்தனர்:—முத்துவடுகநாததேவர், பெரிய மருது,சின்ன மருது. இவர்கள் அசகாய சூரர்கள். மருது சகோதரர் அந்தக்கால பலசாலிகள். பெரிய மருது"இந்தக் கும்பினிப்படையை இப்படி முறியடிப்பேன்" என்று கும்பினி ரூபாவைக் கையால் வளைத்து முறித்தான். சின்ன மருது போர் அரங்கை அமைத்து நடத்தினான். அவன் வைத்த குறி தவறாது.

கும்பினிப்படை சிவகங்கை அரண்மனையை வளைத்துக்கொண்டது. உடனே சின்னமருது முத்துவடுகநாதத்தேவரை ஒரு தனி வழியே காளையார்கோவில் கோட்டைக்குள் கொண்டு சேர்த்து அங்கே கடும்போர் தொடங்கினான். ஒரு குண்டுணிச்சுப்பன் பகைவருக்குப் பாதைகாட்டிக்கொடுத்து துரோகம் செய்தான். அதனால் பகைவர் காளையார்கோவிலில் புகுந்தனர். ஒரு துளி ரத்தம் இருக்குமட்டும் போர் செய்து சுதந்தரக்கொடியைப்பிடித்துக் கொண்டே முத்துவடுகு தியாகபலியானான். அந்தக்கொடியை மருதுசகோதரர் தாங்கிப்பிடித்தனர். அவர்கள் சிவகங்கை அரண்மனையைக்காக்க ஓடிவந்தனர். அங்கே கும்பினிப்படை கொட்டமடித்து, ராணி வேலுநாச்சியாரைப்பிடிக்க அந்தப்புரத்திற்குள் பாய்ந்தது. சின்னமருது எப்படியோ உள்ளே புகுந்து பெருந்திரளான செல்வத்துடன் ராணியையும் மூடுபல்லக்கில் அழைத்துக்கொண்டு 2000 மறவருடன் பூச்சிநாயக்கன்பாளையம் போய்ச் சேர்ந்தான். குண்டுணிகள் துப்புச்சொல்லவே கும்பினிப் படைகள் பூச்சிநாயக்கன் ஊரை வளைத்துத் தேடினர். அங்கே ராணியில்லை...பிறகு எங்கே? திண்டுக்கல்லில்.

## வேலு நாச்சியார்

திண்டுக்கல்லில் அப்போது ஐதராலி முகாம் போட்டான். தென்னாட்டினின்று ஆங்கிலேயரை ஓட்டவே போர்முரசுகொட்டினான். அவன் சிவகங்கைப்புரட்சிக்காரரை வரவேற்றான். வேலு நாச்சியாரின் வீரத்தைப்புகழ்ந்தான். அவளும் போர்க்கலை கற்றாள். சின்னமருது மாறுவேடம்பூண்டு அரியலூர், உடையார்பாளையம், சிவகிரி, பாஞ்சாலம்குறிச்சி,சிவகங்கை முதலிய பல இடங்களுக்குச் சென்று புரட்சிவீரரைத் தூண்டினான். ஆயுதங்களைச் சேர்த்தான். அவன் கையில் இருபதினாயிரம் வீரர் தயாரானார். ஏராளமான ஆயுதங்கள் சேர்ந்தன—துப்பாக்கி, விளறிக்கம்பு, வில் வாள் ஈட்டி

முதலியன. இச்சமயம் மைசூர் யுத்தம் வலுத்தது. திப்புசுல்தான் அங்கே ஆங்கிலேயருக்குப் பலமான வேலைவைத்தான். ஆதலால் பகைவர் சிவகங்கைப்பக்கம் மிதமாயிருந்தனர். இதுவே சமயம் என்று மருதுசகோதரர் மெல்லப்புகுந்து, சிவகங்கை மறவரைத் தூண்டிவிட்டுவந்து வேலுநாச்சியாருடன் சிவகங்கையில் புகுந்தனர். விஜயதசமியன்று சிவகங்கையை வென்று முரசுகொட்டி வேலு நாச்சியாருக்கு முடிசூட்டினர்.

## மருது சகோதரர்

1790-ம் ஆண்டு வேலுநாச்சியார் இறந்தார்; அவள்மகள் வெள்ளச்சி மூன்றாண்டும் அவள் கணவன் வங்கம் பெரிய உடையாத்தேவர் எட்டாண்டுகளும் ஆண்டனர். வங்கம் தேவர் தொண்டியில் பெரிய கப்பல் வாணிகத்தை நடத்தினர். இதற்குள் மருதுசகோதரர் கைவலுத்தது. அவர்கள் மந்திரிகளாயிருந்து பிறகு செங்கோல் நடத்தத்தொடங்கினர். மருது பாண்டிய ராயினர்; தஞ்சை மதுரை புதக்கோட்டை ராமநாதபுரமெல்லாம் சுதந்தரக்கொடிநாட்டி ஆள நீளக்கனவுகண்டனர். அதற்கேற்ற படையும் திரட்டி, கும்பினிக்காரரைக் குறிவைத்தனர். இவர்கள் ஆற்றலும் தோற்றமும் கண்டு வெள்ளைத்துரைமார் சள்ளைப் பட்டனர். மருதுசகோதரர் சிவபக்தர். தினம் சிவபூஜைசெய்து,

கேடுசெய்யும் துஷ்டர்கள் கேட்டொழிந்து போகவே
நாடு கூடி வாழவே நல்லசிவம் அருள்கவே

என்று தோத்திரம் செய்வாராம். பிறகு தானதருமங்கள் செய்வார்கள். நாளெல்லாம் வீரப்பயிற்சிதான். தீட்டிய வீரத்திற்கு நீட்டிய போர் வருகிறது.

## பாஞ்சாலம் குறிச்சிப்போர்

திருநெல்வேலி கம்பளநாயக்கரும் சிவகிரி மறவரும் கும்பினிக் காரருடன் போர்தொடுத்தனர். கறுத்தையா கட்டபொம்மு, சிவத்தையா குமாரசாமி, துரைசிங்கம் ஊமையன் ஆகிய மூவரும் பாஞ்சாலம்குறிச்சியில் விடுதலைக்கொடி நாட்டி ஆண்டனர். ஐநூறடிநீளம் முன்னூறடி அகலம் உள்ள பெரிய கோட்டைகட்டி ஏராளமான ஆயுதங்களைக்கொண்டுசேர்த்து, இவர்கள் பலமான போர்புரிந்தார்கள்.

மேஜர்களும் கர்னல்களும் நயமாகவும் பயமாகவும் இவர்களிடம் கிஸ்தி வசூலிக்கப்பார்த்தனர். 'இதோ கிஸ்தி" என்று ஒரு சாக்கு வரும்; கலெக்டர் ஜாக்குஸன் ஆவலாக அவிழ்ப்பார்; சாக்கில் கூழாங்கல்லே காணும்! ஒருமுறை இவர்களை இராமநாத புரம் கோர்டில் கொண்டுவந்து ரிமாண்டில் வைத்தார் கலெக்டர். உடனே பாஞ்சாலம்குறிச்சிக்கோட்டையைக் காலிபண்ணி சாமான்களை ஏலம்போட்டார். கோர்ட்டுவிசாரணை நடக்கிறது. ஊமையன் சாடைகாட்டினான். வெளிக்குப்போவதுபோல் சென்று கட்டபொம்மு ஒரே தாவில் காவல்துரையைக் கரும்புபோல் வெட்டினான். ஹாஹா சுடுசுடு என்று அலறினான் கலெக்டர். அதற்குள் பகதூர் வெள்ளையன் கட்டபொம்முவை அத்தாயமாகத்தூக்கிக்

கொண்டு ஓடிமறைந்தான். ஐயோ என்று வெண்ணெய்வெட்டிச் சிப்பாய்கள் அலறி ஓடினர். பெரியமருதின் மறவீரர் அங்கே துணைசெய்தனர். கட்டபொம்முசகோதரர் பாஞ்சாலங்குறிச்சிக்கு மீண்டு, ஏராளமான ஆட்களைக்கொண்டு ஒரேநாளில் கோட்டையைப் புதுக்கிக் கொடிபோட்டு ஆண்டனர். மேஜர் பானர்மான் அந்தக் கோட்டையை பலமான பீரங்கிப்படையால் தாக்கினான். கட்ட பொம்மு கும்பினிப்படையை வெட்டிச் சுட்டுச்சுட்டுத்தள்ளினான். கும்பினிப்படைகளும் பலமாகச் சுட்டுக்கோட்டையை இடித்து உள்ளே புகுந்தன. எங்கே கட்டபொம்மு...?

## ஊமையன் சண்டை

ஆள் நாகலாபுரத்தில் மறவர் படைசேர்த்துப்புரட்சி ஜோடித்தான். துரோகிகள் துணையால் பானர்மான் நாகலாபுரத்தை வளைத்தான். கட்டபொம்மு சிவகங்கைக்குஓடி மருதுசகோதரருடன் சேர்ந்துகொண்டான். புதுக்கோட்டை விஜயரகுநாதத்தொண்டைமான் சிவகங்கைக்காட்டை வளைத்து கட்டபொம்முவைப்பிடித்துக் கொடுத்தான். 16—10—1799ல், கயத்தாற்றில் பானர்மான் கட்டபொம்முவைத் தூக்கிலிட்டான். பொம்மு துரோகக் கும்பலை முறைத்துப்பார்த்து, ஊமையனுக்குச் சாடைகாட்டி சுதந்தரப் புன்னகையுடன் இறந்தான். பானர்மான் உடனே ஊமையன் முதலிய எழுவரைப்பிடித்து பாளையங்கோட்டையில் சிறையிட்டான். பாஞ்சாலங்குறிச்சி வீரரும் மருதுநாட்டு மறவரும் சும்மா இருப்பார்களா? சிறையிலிருந்தே ஊமைத்துரை பெரிய புரட்சிப் படைசேர்த்தான். எல்லோரும் விறகுவிற்பவர் பயறு அவித்து விற்பவர், புல்விற்பவர்போல் சிறையைச் சுற்றிக் கூடினர். சந்தைகளில் திரிந்தனர். வெள்ளையர் கூடிக்குடித்துக் கும்மாளம் போடும் ஒரு நாள் சிறையில் கலகம்; கதவுகள் படார் என்று தகர்ந்தன. விறகுக் கட்டுகளிலிருந்து பளபளவாட்கள் புறப்பட்டன...புல்லிலிருந்து துப்பாக்கிகளும் ஈட்டிகளும் நீட்டின. ஊமையன் சிறைக்காவலரை வெட்டிச் சாய்த்தான். சகாக்களுடன் ஒரே தாவில் ஓடித் தப்பினான். அவன் வீரர் வாட்களை வீசிக்கொண்டே பகைவரை வீழ்த்திப் பாஞ்சாலங் குறிச்சி சேர்ந்தனர். தரைமட்டமான கோட்டையை மீண்டும் வானளாவ எழுப்பிக் கொடிபோட்டான் ஊமைத்துரை. ஊழித்தீபோல் வந்தான் மேஜர்பானர்மான். ஆழிவெள்ளம் போல்பாய்ந்தான் ஊமையன்; மெக்காலே வந்தவழியே ஓடிப் போய் திருச்சிப் பட்டாளங்களுக்குச் செய்தியனுப்பினான். அதற்குள் ஊமையன் கொடி தூத்துக்குடிவரையில் பறந்தது. வந்தான் மேஜர் ஷெப்பேட். ஒட்டைப்பிடாரத்தில் ஊமையன் படை அவனை எதிர்த்து முறியடித்தது. ஷெப்பேடுக்கு இந்தச் சிங்கத்தின் வீரம் தெரிந்தது; ஓடிப்போனான்: இரண்டுமாதங்கள் அமைதி; வந்தான்அஞ்னுதுரை; அசுரப்போர் புரிந்து படுகொலை செய்து கோட்டையைத் தகர்த்து உள்ளேபுகுந்து "பிடி ஊமையை" என்றான். ஊமையைக் காணோம்...பிணக் குவியலைப்புரட்டினான். காணவில்லை. கும்பினிக்காரருக்குத் துணைசெய்த எட்டையபுரம்

திருப்புகள் வீடு வீடாகத்தேடின. ஒருவீட்டில் வேப்பிலை செருகியிருந்தது. 'ஐயோ! என் அருமைமகன் அம்மைகண்டு மாண்டானையா"...என்று ஒருதாய் மாரடித்து அலறினள். "ஐயோ தொத்துநோய்" என்று அஞ்சி அஞ்ஞூறு ஆட்கள் அந்தத் தெருவை விட்டே அகன்றர். அந்த வீட்டிலிருந்து ஒருபிணம் புறப்பட்டது... நல்ல இருட்டு; சுடுகாட்டுக்கு வந்ததும் பாடையிலிருந்து பிணம் எழுந்தது...குதிரைமேல்ஏறி விட்டதுசவாரி......பிணம் யார்?...... ஊமைத்துரைதான்!...நூறுமைல் அதி வேகமாகக்கடந்து சிவகங்கைக்குப்போய்விட்டான். அங்கே மருதுசோதரர் மேளதாள ஊர்வலத்துடன் அவனை உபசரித்து "செய்வோம் சுதந்தரப் போர்" என்றனர்.

## சிவகங்கைப்போர்

சிவகங்கை மருதுப்புரட்சி சரித்திரப்புகழ் பெற்றது. சிறுவயலில் மருது, திருமயத்தில் ஊமையன் படைவீடமைத்துக் கொண்டு வெள்ளையரைத் தூங்கவிடாமல் அடித்தனர். புதுக்கோட்டைத் தொண்டைமான் வெள்ளையருக்கு எல்லா உதவியும் செய்தான். இன்றேல் புரட்சிக்காரரைப் பிடித்திருக்கவே முடியாது. இரவில் இளநீர் (தலைகள்)வெட்டிக்குவித்துப் பகலில் காட்டுப்புதர்களில் மறைந்தனர் வீரர். அங்கே கைவைத்தால் படார் என்று வெடி; ஆளைத் தூக்கியடிக்கும். மருதின் ஒற்ற ஆலமரங்கள்மேல் அமர்ந்து பகைவரை உளவு பார்ப்பர். பகைப்படை வந்தால், ஒரு சீழ்க்கைபோதும்...எல்லோரும் வளைத்துக்கொண்டு பகைவரைத் தீர்த்துக் கட்டுவர். எதிரிசேனை பலம்; துரோகிகள் சூழ்ச்சியும் பலம். முடிவில் சிறுவயலில் மருதுபாண்டியரைப் பிடித்து திருப்புத்தூரில் தூக்கிட்டனர். ஊமையனை வஞ்சனையாக விருந்திற்கு அழைத்துக் காட்டிக்கொடுத்தார் ஒற்றர். கும்பினிக்காரர் அவனையும் சிவத்தையாவையும் பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிட்டனர். 79-புரட்சி வீரரை பிரின்ஸ் ஆவ்வேல்ஸ் தீவிற்கு அனுப்பினர். இத்துடன் ஒரு சண்டமாருதம்ஓய்ந்தது. நாலுகோட்டை மறவர்ஆட்சியும்ஓய்ந்தது.

கும்பினிக்காரர் படமாத்தூர் மறவர் தலைவரான கௌரி வல்லப பெரிய உடையாத்தேவரை சிவகங்கை ஜமீந்தாராக நியமித்தனர். கர்னல் அஞ்ஞு துரை புதுக்கோட்டைப் படைகளுடன் வந்து, முடிசூட்டுவிழா சிறப்பாக நடத்தினன். சிவகங்கை அன்று முதல் இஸ்திமிரார் ஜமீன் ஆனது.

கௌரிவல்லபத்தேவர் கலாரசிகர். தாராளமான ஈகைச்செல்வர். இவர் தர்பாரில் புலமையும் நீதியும் விளங்கின. கவி குஞ்சர பாரதியார், வேம்பத்தூர் பிச்சுவையர், வில்லியப்பக்கவிராயர், எனது தமிழாசிரியர் தெய்வசிகாமணிப் புலவர், பெரிய வைத்திநாதர், சின்ன வைத்திநாதர்முதலிய பல புலவர் தேவர் சபையை அலங்கரித்தனர். சிறுவயதில் இவர்களைப் பார்த்திருக்கிறேன்.


## லெஸ்ஸிகள் ஆட்சி

பிற்காலம் சிவகங்கை கடனுக்கு உள்ளானது. ஸ்டிரானக் என்ற ஆங்கிலேயர் சில லகாரங்கள்தந்து அதைக் குத்தகைக்கு

வாங்கிப் பெருத்த லாபம் அடிந்தார். வெஸ்லிகள் என்ற வெள்ளைக்கார் ஜமீன்களை நிர்வகித்தனர். அவர்கள் செய்த பெரும் செயல் சிவகங்கைக்குப் பெரியாற்று நீரைக் கொண்டுவந்ததே. சிவகங்கையில் பெரிய அரண்மனையிலும் அதைச்சூழ்ந்த சிறிய அரண்மனைகளிலும், அரசகுடும்பத்தார் வசித்தனர். அவருள் டில்லி பாசாத்தேவரை நன்கு அறிவேன்—கம்பீரமான வீரர். அவர் அந்தக் கால வீரர் கதைகளை உருக்கமாகச் சொல்லுவார். அவர் மகன் துரைசிங்கத்தேவர் நான் அங்கிருந்தபோதே ஜமீந்தார் ஆனார். மைனராயிருந்தார். அவர் மகனாரே இன்று ஜமீந்தாராயிருக்கிறார். துரைசிங்கத்தேவர் கல்விக்கும், சாரணீயத்திற்கும் விளையாடல்களுக்கும் அரியதொண்டு செய்தார். அவர்காலத்தில் பெரிய மைதானங்கள் விளையாட்டிடங்களாயின. மாணவர் விடுதிகள் எழுந்தன. அவர் மகனார் இன்று துரைசிங்கம் கல்லூரி நாட்டி அரிய அறிவுப்பணி செய்கிறார். நான் சிவகங்கையைப் பார்த்து முப்பதாண்டுகள் ஆயின. இடையே ஒருநாளே அங்கே தங்கநேர்ந்தது. இப்போது ஊர் மாறிப்போயிருக்கும். நான் கண்ட சிவகங்கையையே இங்கே சொல்லோவியமாக்குகிறேன். ஜமீன்ஒழிப்பு மசோதா சட்டமானது; இனி சிவகங்கை ஜமீனாகயிராது; பொது ஜன நிலையமாயிருக்கும்.

(அடுத்தஇதழில், ஊர்சுற்றி.)

---




"சாமி! வாங்க நம்ப வண்டிலே, நிமிசத்திலே பூடலாம்!"

"அப்பா! நான் சீக்கிரமா போகவேண்டியிருக்கு; அதனாலே நடந்து போயிடறேன்" — பூச்சி

ஸ்ரீமதி கி. ஜயலக்ஷ்மி 

# வாழ்க்கைப் புயல்

அந்தக் கடிதம் வந்ததுமுதல் சாரதாவுக்கு வீட்டில் ஒரு வேலையும் ஓடவில்லை. அவள் மனம், ஸந்தோஷத்திலும் பெருமையிலும் மூழ்கிக் கட்டிலடங்காமல் அலைந்துகொண்டிருந்தது. எப்படியோ தட்டித்தடுமாறி, ஆபீஸுக்குப் போகும் கணவனுக்கும், ஸ்கூலுக்குப் போகும் லலிதாவுக்கும், சாப்பாடு போட்டு அனுப்பிவிட்டாள். அவளுக்கு சாப்பாடே பிடிக்கவில்லை. சமையலறையில் எல்லாவற்றையும் மூடிவைத்துவிட்டு வந்து, மறுபடியும் அந்தக் கடிதத்தை எடுத்தாள்.

"சிரஞ்சீவி, மாப்பிள்ளை நடராஜன், ஸௌ. சாரதா இருவருக்கும் அனேக ஆசீர்வாதங்கள். உபயகுசலோபரி. சி. சங்கர், ஸௌ. லலிதா இருவருடைய ஜாதகங்களையும் இங்குள்ள ஜோஸ்யர்களிடம் காண்பித்துக் கேட்டதில், பொருத்தம் சரியாயிருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் அதிகநாள் ஓட்டாமல், இந்த மாதக் கடைசிக்குள்ளேயே முஹூர்த்தத்தை வைத்துக்கொள்ளலாமென்று எண்ணுகிறேன். உடனே உங்கள் அபிப்ராயத்தையும் ஸௌகரியத்தையும் எழுதவும். குழந்தை க்ஷேமத்திற்கும், மற்ற விசேஷங்களுக்கும், உடனே பதிலை எதிர்பார்க்கிறேன்.

ரகுநாதன்."

என்பதைப் படித்து முடித்தாள். கடிதத்திலுள்ள விஷயம் நல்லதாக இருந்தாலும் சாரதாவுக்குப் பல விசேஷ ஸமாசாரங்களை ஞாபகமூட்டி அவள் மனதில் பெரும் புயலை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. கடும் மழையில் வீசும் புயலினால் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்களைத்தான் ஐந்து வருஷம் அவள் வாழ்க்கையில் வீசிய புயலிலும் அடைந்தாள். ஆம். புயலுக்குப்பின் ஏற்படக்கூடிய அமைதிதான் இப்பொழுதைய அவள் வாழ்க்கையில் நிலவியிருந்தது. தான் சாப்பிடவில்லை என்பதையும், நேரமாவதையும்கூட உணராமல், பலநாளைய சம்பவங்களின் நினைவில் ஆழ்ந்தவளாய் மெய்மறந்து, கையில் கடிதத்துடன் பதுமைபோல அப்படியே அமர்ந்துவிட்டாள்.

"எது யோஜனை பலமாயிருக்கே! எந்தக்கோட்டையைப் பிடிக்கிறதா உத்தேசமோ? என்று கேட்டபடியே, சாரதாவின் ஸ்னேகிதி விஜயா வந்து உட்கார்ந்தாள். மஞ்சள் தடவிய கவரும் கடிதமும் சாரதா கையிலிருப்பதைக்கண்டு, "யாருக்கு கல்யாணம்?" என்றுகேட்ட விஜயாவிடம் கடிதத்தைக் கொடுத்தாள். விஜயா படித்துவிட்டு, "ஓஹோ! அப்படியா சேதி? என்னடாப்பான்னு பார்த்தேன். மாப்பிள்ளை வரப்போர பெருமையில்தான் இத்தனை நாழி என்னுடன் பேசாமலிருக்கயா? கல்யாணம் எப்போ?"....

"இன்னும் நிச்சயமாகல்லே."

"ஏன் என்னமோபோல இருக்கே? வரனுக்காக அலையாமல் நிச்சயங்கூட உனக்கு வைக்காமே, உன் அதிருஷ்டத்திற்கு; அண்

ணாவும் மன்னியும் பிள்ளையை ரெடியா வச்சுண்டு தாங்கரத்துக்கு இருக்கச்சே நீ எப்படி வேணுமானாலும் இருக்கலாம், என்னைப் போலவா சொல்லு" என்று, பாதி கேலியாகவும், பாதி சலிப்பாகவும் சொன்னாள்.

சாரதாவின் மனம் இந்த பரிகாஸத்தை ரஸிக்கக்கூடியநிலைமையிலில்லை. அவள் சலிப்புடனும் ஆழ்ந்த மனோவேதனையுடனும், "ஆமாம். அண்ணா, மன்னி, தம்பி, எல்லாஉறவுகாராளும் நாம் பணம் பதவி எல்லாவற்றிலும் உயர்ந்து நன்றாய் இருக்கும்போதுதான் நம்மை கௌரவமாயும் மதிப்பாயும் எண்ணி நடத்துவார்கள். பணத்திலும் பதவியிலும் குறைந்து சாதாரணமாக இருந்தோமானால் எட்டிப்பார்த்தால் எங்கே ஒட்டிக்கொள்ளுமோ, ஏதாவது உதவி செய்யவேண்டிவருமோ, என்றுபயந்து விலகியே இருப்பா. பதவி குலைந்து, பணமில்லாமல் இவர்களை அண்டினால், நாம் மனிதர்கள் என்ற நினைவையே மறந்துவிடுவார்கள். இப்பொ என் பெண்ணை தன்பிள்ளைக்குக்கேட்கும் இதேமன்னியும், அவளுடைய தூண்டுதலால் அண்ணாவும், 16 வருஷங்களுக்குமுன்னால், நான் கேவலமாயிருந்தபோது என்னை எப்படிஎல்லாம் நடத்தினார்கள் தெரியுமா? ஆனால், அப்பொ இருந்தநிலைமையில், என்வாழ்க்கையில் இப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டு நானும் எல்லோருக்கும் சமமாக இருப்பேனென்று ஒருவராவது நினைக்கவில்லை. என் ஜீவியத்தில் அனுபவித்த, மனதால் நினைக்கவும் முடியாத துன்பமான சில விசேஷஸம்பவங்களை இப்பொழுதுநினைத்தால், என்னாலேயே நம்பமுடியாமலும், கனவுபோலவும் இருக்கிறது" என்றாள்.

விஜயா:-ஆனால்,உன் அண்ணாபிள்ளைக்கு லலிதாவைக்கொடுக்க உனக்கிஷ்டமில்லையா? அவர்களிடம் நீ எப்பொ, என்ன கேவலமானநிலைமையில் இருந்தாய்?...என்றாள்.

இத்தனைநாளாய் சாரதா, விஜயாவிடம் எவ்வளவோ ஸஹஜமாய் நெருங்கிப் பழகினாலும்கூட, தன்னுடைய சிறுமையான விஷயங்கள் எதையும் சொன்னதில்லை. தான் வாழ்க்கையில் அனுபவித்த கஷ்டம் துயரம் முதலியவைகளைப் பிறரிடம் சொன்னால் கேவலமாய்மதித்து ஒருவேளை பரிகாஸம் செய்வார்களோ என்னமோ என்றெண்ணி ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளமாட்டாள். முக்யமான பொருள்களை இரும்புப்பெட்டியில் வைத்துப் பூட்டுவது போல, தன் வாழ்க்கை ஸம்பவங்களையும் தன் இருதயப் பெட்டியிலேயே வைத்துப் பூட்டியிருந்தாள்.

சிலரைப்போல விஜயா ஒரு வம்புக்காரியில்லை. மேலும், சாரதாவைப்போல, அவளும் வேண்டியவரை கஷ்டஸுகங்களை அனுபவித்தறிந்தவள். எல்லாரிடமும் எல்லாவற்றையும் சொல்லிக்கொள்ள முடியுமா? சிறுமையோ, பெருமையோ அதை அனுபவித்திருந்தவர்களிடம் சொன்னால்தானே ரஸித்துக் கேட்பார்கள்! ஆறுதலும் உண்டாகும். அனுதாபமும், அனுபவமும் நிறைந்த விஜயாவிடம் சாரதா, தன் வாழ்க்கை ஸம்பவங்களைச் சொல்வதின்மூலம் தன் மனோவேதனையையும், இருதயபாரத்தையும் குறைத்துக்கொள்ள எண்ணிச் சொல்ல ஆரம்பித்தாள்.

என் தகப்பனார், பூங்குடி கிராமத்தில் ஒரு நெல்லுமெஷின் தான் வைத்திருந்தார். அவருக்கு ஊரில் செல்வாக்கு அதிகம். அண்ணாவுக்குப்பிறகு, நாள்கழித்துப் பிறந்த என்னை எவ்வளவோ ஆசையோடு அருமையாய் வளர்த்தார்கள். கிராமப்பள்ளிக்கூடத்தில் நான்கு வகுப்புவரை படித்துவிட்டு வீட்டில் சிறிது ஆங்கிலமும், பாட்டும் கற்றுக்கொண்டேன்.

சுமார் 25 வருஷங்களுக்குமுன், இந்தக் காலம் மாகிரி "வயது வந்த பெண்களுக்குக் கல்யாணம் செய்வது வழக்கத்திலில்லாததால், என் 11-வது வயதிற்குள்ளேயே கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று அப்பா அவஸரப்பட்டார். கடைசியில் அவருக்குப் பிடித்தமான ஒரு வரனையும் தேர்ந்தெடுத்தார். அந்த வரனுக்கு தகப்பனார் இறந்துபோய், தாயார்மட்டும்தான் இருந்தாள். ஒரே பிள்ளை. நல்ல அழகு. அதிக ஸொத்து கிடையாது. மாப்பிள்ளை எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அவர் மேலும் தொடர்ந்து B. A. வரை படிக்க விரும்பியதால், சீர் வகைகளைச்சுமாராகச் செய்துவிட்டு,மேல்படிப்புக்காக, ரொக்கமாக கையில் 2000-ரூ கொடுக்கும்படி பிள்ளைவீட்டார் கேட்டனர். அப்பா ஸம்மதித்து அவர்கள் கேட்டபடியே கொடுத்துக் கல்யாணத்தைச் செய்தார்.

அடுத்த சில மாதங்களில் என் பாட்டி இறந்துவிட்டபடியால் அந்த வருஷம் தலைதீபாவளி முதலிய விசேஷ பண்டிகைகளுக்கு மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டாடுவதற்கில்லாமல் போயிற்று.

நான் எப்பவாவது அபூர்வமாய் பண்டிகைகளைக் கொண்டாடுவதற்காகப் புக்ககம் போவேன். அவர் படித்துக்கொண்டிருந்ததாலும், தாய் தந்தையருக்கு அருமைப் பெண்ணாயிருந்த நான் மிகவும் சிறுமியாயிருந்ததாலும் அங்கு என்னை ரொம்பநாள் விட்டு வைக்காமல் அழைத்துவந்துவிடுவார்கள். கணவரோ, மாமியாரோ தங்களிடம் விட்டுப்போகும்படி வற்புறுத்தவும் மாட்டார்கள். இப்படியே நாலு வருஷங்கள் சென்றன.

யாரும் எதிர்பாராதபடி அப்பா திடீரென்று மாரடைப்பினால் இறந்துவிட்டார். அப்பாவுக்கு ஊரில் இருந்த செல்வாக்கினாலும், தொழில்முறையிலிருந்த அனுபவத்தினாலும், கடன் வாங்கி, நெல் வியாபாரத்தில் போட்டுப் புரட்டிவந்தார். அப்பா இருக்கும்வரை ஒன்றும் கஷ்டம் தெரியாமல் எல்லாம் நன்றாய் நடந்தது. அப்பா இறந்தஉடன், ஒன்றிலும் அனுபவமில்லாத அண்ணாவுக்கு எல்லாம் மலைப்பையும் கவலையையும் கொடுத்தது. கொடுக்கல், வாங்கல் எல்லாம் அப்படியே இருந்தது. அப்பாவுக்கு கடன் கொடுத்திருந்தவர்களில் சிலர், தங்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஞாபகமூட்டினார்கள். ஆகவே எல்லாவற்றையும் உத்தேசித்து அப்பா சுலபமாய் நடத்திவந்த அதே தொழிலை, அனுபவமில்லாத அண்ணா ரொம்ப சிரமத்துடன் நடத்த ஆரம்பித்தான்.

இந்த ஸமயத்தில் என் கணவரிடமிருந்து, B. A. பாஸாகிவிட்டதாயும், ஒரு உயர்ந்த வேலை ஆகப்போவதாயும், அதற்கு டிபாஸிட்டாக, 500. ரூபாய் கட்டவேண்டியிருப்பதால், உடனே

அந்தத்தொகையை அனுப்பும்படியும் கடிதம் வந்தது. அண்ணு, ஏற்கனவே அப்பா வைத்துப்போன கடனை நாணயமாய் அடைத்து, தன் தொழிலை கௌரவமாய் நடத்துவதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், இப்பொ திடீரென்று எப்படி 500 ரூபாய் புரட்டமுடியும்? அப்பா இருந்தாலும் எப்படியாவது கொடுப்பார். அண்ணு தன்னிலைமை பூராவையும், என்கணவருக்கு விவரமாய் எழுதி அவர் கேட்டதொகையை இந்த சமயம் தான் அனுப்பக்கூடிய நிலைமையிலில்லை என்பதையும் எழுதிவிட்டான்.

அக்கடிதத்திற்கு, என் கணவரிடமிருந்து, ஒருவிதமான பதிலும் வரவேயில்லை. நாலைந்து மாதங்களும் ஆய்விட்டன. வீட்டில் அம்மா, மாப்பிள்ளைக்கு வேலை ஆய்விட்டதோ, இல்லையோ, ஒண்ணும் தெரியல்லையே என்று ஸதா புலம்பிக்கொண்டே இருந்தாள். அண்ணு எத்தனையோ கடிதங்கள் எழுதியும் அவரிடமிருந்து பதிலே வரவில்லை. அவர் கேட்டபொழுது பணமனுப்பாததால், கோபமோ என்னவோ என்றெண்ணி, அம்மாவுக்கு மனது கேட்காமல், நேரில் போய்ப்பார்த்துத் தகவல் தெரிந்துகொண்டுவரும்படி அண்ணுவையே அனுப்பினுள்.

அவன் கொண்டுவந்த செய்தி 15 வயதுகூட நிறையாத சிறுமியாகிய என்னைவிட வயதும் அறிவும் முதிர்ந்த என்தாயாரைத் தான் அதிகமாகத் தூக்கிவாரிப்போட்டுக் கலங்க அடித்தது.

அவர் விரும்பிய அதே வேலை ஆய்விட்டது. அதற்குக் கட்ட வேண்டிய தொகையை, அவர் மாமா கொடுத்தாராம். அத்துடன் நின்றாரா? இல்வலன், வாதாபி முதலிய ராக்ஷஸ கோஷ்டியைச் சேர்ந்த அந்த மாமா, என்கணவருக்கும் மாமியாருக்கும், அவர்கள் எழுதியவுடன் நாங்கள் பணமனுப்பாததைப் பற்றி எவ்வளவோ சொல்லிக் கலைத்து முதலில் பணத்தைக் கடனுகக் கொடுத்துப் பிறகு தன் பெண்ணையும் இளையாளாகக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டார்.

படிப்பின்மேலிருந்த ஆவலாலும், அதற்கு அனுகூலமாக அப்பா கொடுத்த பணத்திற்காகவும், வேறுவழி இல்லாமல் என்னைக் கல்யாணம் செய்துகொண்டாரேதவிர, உண்மையில் அவருக்கு என்னிடம் பிரியமில்லை என்பதை நான் எத்தனை நாளைக்கு முன்பே உணர்ந்திருந்தாலும்கூட, நாளடைவில் நிலைமை சீர் திருந்திவிடும் என்று என் மனதையே ஸமாதானம் செய்துகொண்டிருந்தேன். இப்படி வேறுகல்யாணம் செய்துகொள்வாரென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. நல்லவேலையிலமர்ந்து, பணமும் பதவியும் உயர்ந்ததும், தன் படிப்பு, அழகு, நாகரீகம் முதலியவைகளுக்கு ஏற்ற மனைவியை அவர்மனம் விரும்பியதே தவிர, சாதாரணப் படிப்புடன், அழகு நாகரீகம் ஒன்றுமில்லாத நாட்டுக்கட்டையாகிய என்னை மனைவியாக எண்ண வெறுப்படைந்தார். ஆகவே, மாமாவின் பேச்சை ஏற்று, எல்லாவிதத்திலும் தனக்குப் பொருத்தமாயும், பிடித்தமாயுமிருந்த மாமா பெண்ணையே கல்யாணம் செய்துகொண்டார்.

அண்ணு அவரைத் தனியாய் ஸந்தித்து பலவிதமாய்க் கேட்ட தற்கு, அவர் எல்லாவற்றிற்கும் மௌனமாய் இருந்துவிட்டுக் கடைசியில், அவருடைய படிப்பிற்காகக் கொடுத்த பணத்தை வேணுமானல், கொஞ்சநாளில், எனக்காகத் திருப்பித் தருவ தாகக் கூறினாராம். அவருடன் இன்ப வாழ்க்கை நடத்தும் நாளை எதிர்பார்த்துநின்ற எனக்கு இந்தச் செய்தி எப்படி இருக்கு மென்று சொல்லவேண்டியதில்லை.

அவர் வேறுகல்யாணம் செய்துகொண்டதும், அப்பா கொடுத்த பணத்தை எனக்குத் திருப்பித் தருவதின்மூலம் அவர் உரிமையையும், கடமையையும் தீர்த்துக்கொள்ளப் பார்ப்பதும் ஒன்றைவிட ஒன்று எனக்கு அளவற்ற துக்கத்தையும் ஆத் திரத்தையும்தான் கொடுத்தது. என் பிற்கால ஜீவியத்தைப் பற்றி ஒன்றும் புரியாத எனக்கு, அவருடைய படித்த மூளையும் என் விதியும் சேர்ந்து விட்டவழியில் செல்வதில் நான் எவ்வளவு கஷ் டத்திற்குள்ளானலும் அவரிடமிருந்து பணத்தைமட்டும், பெறக் கூடாதென்ற கடும் வைராக்கியம்தான் பிறந்தது. அம்மாவின் நிலை மையோ வர்ணிப்பிலேயே அடங்காது. படிப்பும், நாகரீகமும் கஷ்டப்பட்டாவது கற்றுக்கொள்ளலாம். ப்ரும்மாவால் சிருஷ் டிக்கப்படவேண்டிய அழகையும் அத்ருஷ்டத்தையும் யாரால்தான் தரமுடியும்?

நாங்கள் யாரிடமும் இதுபற்றிச் சொல்லிக்கொள்ளாதபோதி லும் எப்படியோ அரைகுறையாய் வெளியில் பரவிவிட்டது. கல் யாணமோ, கோயில் குளமோ, என்னைக் கண்ட இடங்களில் மெது வாய் என்வாயைக் கிளற ஆரம்பித்தார்கள்.

அவர் கல்யாணம் செய்துகொண்டதைவிட, இவர்கள் ரொம்பக் கவலையுள்ளவர்கள்போலப் பலவிதமாய்க் கேட்டு என்வாயைக் கிளறுவதுதான், என்மனதிற்கு அதிக வேதனையைக்கொடுத்தது. இதற்காக வெளியே கிளம்புவதையே நிறுத்தி, வீட்டோடு அடைபட்டுக் கிடந்தேன். மனம் புண்ணுகியிருந்த அம்மாவும், வெளியே கிளம்பமாட்டாள். வீட்டிலிருந்த மூவரும், உத்ஸாகமும், நிம்மதியும் இல்லாமலிருந்தோமாகையால், வீடே களை இழந்து என்னவோபோலிருந்தது. எனக்கு பொழுதுபோக்கும் ஆறு தலும் அண்ணு வாங்கிவரும் கதைப் புஸ்தகங்கள்தான்.

இரைவிழுங்கின பாம்பு நகர்வதுபோல நாட்களும் நகர்ந்து மாதங்களாயின. வீட்டில் குடிகொண்டிருந்த அஸாதாரணமான அமைதி எனக்கு வேதனையை அளித்தது. முன்போல் வீட்டில் கல கலப்பு ஏற்பட, அண்ணுவுக்காவது சீக்ரம் கல்யாணமாகி மன்னி யாவது வரமாட்டாளா என்றேங்கியது என் உள்ளம். அண்ணு மில்வைத்துக்கொண்டு நாட்டுப்புறத்திலிருப்பதாலும், வாழாவெட்டி தங்கை ஒருத்தி வீட்டோடிருப்பதாலும், அண்ணு கல்யாணம் நான் விரும்பியபடி சீக்ரத்தில் முடியவில்லை.

கடைசியில் கல்யாணமாகி மன்னியும் வீட்டிற்கு வந்தாள். மன்னியின் வருகையால் நான் அடைந்த ஆறுதலையும் ஸந்தோ ஷத்தையும் அவள் வந்த 1—மாதத்திற்குள் தகர்த்தெறிந்து

விட்டாள். எனக்கு ஸமவயதுடையவளாயிருந்த மன்னியிடம் எவ்வளவுக்கெவ்வளவு மனம்விட்டு ஸஹஜமாய்ப் பழக ஆசைப் பட்டேனோ அவ்வளவுக்கு ஏமாற்றந்தான் அடைந்தேன். என்னிடம் அவள் பேசவே விரும்பவில்லை. நானாக அவளிடம் பேச்சுக் கொடுத்தாலும் என்னை லக்ஷியம்செய்து பதிலளிக்கவில்லை. "வாழாவெட்டி"யாகிய எனக்குப் போக்கிடமில்லை; என்றென்றும் அவள் கையின்கீழ் நான் காலங்கழிக்கவேண்டியவள்தான் என்ற அலக்ஷியத்தாலும், அவளுக்கு என்னிடம் துளிகூட மதிப்போ இரக்கமோ இல்லையென்பதை, பேச்சிலும் நடத்தையிலும் உணர்ந்தேன். என்னுடைய பால்ய ஸ்னேகிதிகள் எல்லோரும் கணவனும், சீரும் சிறப்புமாய் இருந்தார்கள். அவர்கள் எப்பவாவது பிறந்தகம் வந்தால்கூட "வாழாவெட்டி" என்ற போர்வைக்குள்ளிருந்த என்னை மதித்துப் பேசுவதில்லை. கட்டிய கணவனே வெறுத்து ஒதுக்கியபின், எல்லோருடைய அலக்ஷியத்திற்கும் ஆளானேன்.

மன்னிக்கு என்மேல்உள்ள வெறுப்பினால், அண்ணாவிடம் ஏதாவது குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பாள். அவனும் எதையும் விசாரியாமலே, மன்னிக்குப் பரிந்துகொண்டு என்னைக் கண்டிப்பதைக் கண்டு மனந்தாங்காமல், அம்மாவும் அந்த சச்சரவில் தலையிடும்படி ஆகிவிடும்.

யாரிடம் பேசுவதையும் நானே நிறுத்திக்கொண்டுவிட்டேன். எப்பவும் எனக்குப் பாட்டில் அதிக ஆசை. சுமாராய்ப் பாடும் திறமையுமிருந்ததால் வீட்டில் நானே பாடிக்கொண்டிருப்பேன். என் நிலைமை அறிந்து, துக்கமோ வெட்கமோ படாமல், நான் குஷியாக இருப்பதாக அக்கம்பக்கத்திலுள்ளோர் பரிகாஸம் செய்ய ஆரம்பித்தார்கள். மனுஷ்யாளுக்கு ரோஷம் பொல்லாதில்லையா? ஆகவே அடியோடு பாடுவதையே நிறுத்திவிட்டேன்.

பித்துப் பிடித்தாற்போலிருந்த எனக்கு பொழுதுபோக்காக, மனதில் தோன்றும் நல்லது பொல்லாதுகளைப் பிறரிடம் சொல்லிக் கொள்வதற்குப் பதிலாகவும், ஒருவர் முகத்திலும் விழிக்காமல் தனியாய் உட்கார்ந்து கதைகளும் கட்டுரைகளும் எழுதுவேன். சொந்த அனுபவங்களே, என் கற்பனைசக்திக்குப் பெரும் தூண்டுகோலாயிருந்தன. நான் எழுதியனுப்பியவைகள் பத்திரிகைகளில் வெளிவந்ததால் என் மனோவேதனைகள் எவ்வளவோ குறைந்து ஒருவித ஆறுதலையும், உத்ஸாகத்தையும்கூடக் கொடுத்தன. என் ஒழிந்த நேரங்களில் மேன்மேலும் எழுதிக்கொண்டே இருப்பேன். எழுயனுப்பியவைகளுக்குப் பரிசாக, பணமும் பத்திரிகைகளும் அடிக்கடி என் பெயருக்குவரும். மன்னி என்னைவிடக் கொஞ்சம் அதிகமாகவே படித்திருந்தாலும்கூட, இம்மாதிரி கதைகள் எழுதும் விஷயத்தில் என்னுடன்போட்டிபோட அவளால் முடியவில்லை. ஆகவே மன்னிக்கு என்மேல் இருந்த வெறுப்பும் அலக்ஷியமும், வயிற்றெரிச்சலும் பொறாமையுமாக மாறின. நான் எழுதுவதைப் பற்றி ஜாடைமாடையாக, கேலியாயும் நிஷ்டூரமாயும் பேசுவாள். என்னைப் பேனாவும் கையுமாய்க் காணும்போதெல்

வரம், சீக்கிரத்தில் முடியாத கடுமையான வேலைகளைச் சொல்லி எனக்கு எழுத ஒய்வேயில்லாமல் செய்யப்பார்ப்பாள். எதையாவது ஒரு சாக்கைச்சொல்லி விட்டு வேலை முழுவதையும் என்தலையில் சுமத்துவாள். பாவம்! நான் தனியாய்ச் செய்வதைக் காண சஹிக்காமல் அம்மா தன் தள்ளாமையுடன், ஒத்தாசைசெய்தால்தான் உண்டு. நான் எழுதுவதைக் கட்டுப்படுத்த, மன்னி செய்த தந்திரங்களால் என் எழுதும்கையோ ஆசையோ ஓய்ந்துவிடவில்லை. இரவோ பகலோ,எப்படியாவது எழுதிக்கொண்டுதான் இருந்தேன். எழுதுவதற்காக வரும் பணத்தை, எனக்காகச் சேர்த்துவைக்கணுமென்று அம்மா ஆசைப்பட்டாலும், அண்ணு ஏதாவதொரு செலவைச்சொல்லி பணத்தை வாங்கிக்கொண்டுவிடுவான். இந்த நிலைமையில் அம்மாவும் இறந்துவிட்டாள்.

சர்வாதிகாரியான மன்னியிடம் அகப்பட்டுக்கொண்ட நான் பட்டபாடு சொல்லத்தரமில்லை. எவ்வளவு உழைத்தாலும், கடுகளவாவது ஸந்தோஷமோ, இரக்கமோ இல்லாத மன்னியிடம், கேவலமாய்ப் பிழைப்பதைவிட, எந்த தெய்வமாவது என் கணவர், இளையாள் ஆகிய இருவர் மனதிலும் புகுந்து என்மேல் மனமிரங்கி அழைத்துக்கொள்ளச்செய்தால், அவர்களுக்குழைப்பதே எவ்வளவோ தேவலை என்று ஒவ்வொரு ஸமயம் எண்ணுவேன். உலகத்தில் எத்தனைபேர் அப்படி அவர்கள் என்னை உள்ளே எப்படி நடத்தினுலும்கூட வெளியில் பார்ப்பவர்களுக்காவது கொஞ்சம் மதிப்பாயிருக்குமில்லையா?

இவ்வளவிலும், எனக்குக் கொஞ்சம் ஆறுதலை உண்டாக்கியவன், அண்ணுவின் மூன்று வயதுக் குழந்தை சங்கர்தான். அவன் தாய் என்னை வெறுப்பதற்கு நேர் எதிரிடையாய், என்னிடம் ரொம்ப ஆசையாயிருந்தான். குளிப்பாட்டிச் சாதம் போடுவது முதல், தூங்கப்பண்ணுவதுவரை ஸகலமும் அவனுக்கு நான்தான் செய்யவேணும். என்னிடமே ஒட்டிக்கொண்டு, அவனை ஒன்றுக்கும் சட்டைசெய்யாதிருந்த சங்கருக்கு, மன்னி எவ்வளவோ சொல்லியும் அடித்தும், அவன் கேட்கவில்லை. வரவர என் நிலைமை மோசமாகிக்கொண்டுவந்தது. என்ன இருந்தாலும் நானும், உப்புப் போட்டுக்கொண்டு சாப்பிடும் ஒரு மனுஷிதானே? ரோஷம் தாங்காமல் ஏதாவது ஒருவார்த்தை சொல்லிவிட்டால், வீடே கிர்த்துளி பட்டுவிடும். மன்னியிடம் ஒருநாள் போவது ஒருயுகமாக இருந்தது.

யாரும் எதிர்பாராத விதமாய் திடீரென்று ஒருநாள் என் கணவர் வந்தார். அலக்ஷ்யம் கலந்த ஆச்சர்யத்துடன் அண்ணு அவரை வரவேற்றான். அவர் அண்ணுவிடம் "சாருவை அழைத்துக்கொண்டுபோகிறேன் "என்றார்.

அண்ணு வியப்புடன் கேலியாக "ஏன்? சாருமேல் இத்தனைநாள் இல்லாத கரிசனமும் அன்பும் இப்போ எங்கிருந்து வந்தது? முன்பு இருந்ததைவிட இப்போ அழகாய்விட்டாளா என்ன? என்றான்.

அவர் பதிலே சொல்லவில்லை. எங்களுக்கு விவரமாக ஒன்றும் தெரியாவிட்டாலும் இளையாள் இறந்துவிட்டதாகமட்டும் அறிந்

தோம். அவர் வந்த அன்றே என்னை அழைத்துக்கொண்டுவந்து விட்டார்.

கல்யாணமாகி இரண்டுவருஷம்வரை இளையாளுடன் ஸந்தோஷ வாழ்க்கை நடத்தினர். அவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதுமுதல் அவளுக்கு ஒன்றுமாற்றி ஒன்றாக ஏதாவதொரு வியாதி படுத்த ஆரம்பித்தது. கடைசியில் T. B. யில் வந்துநின்றது. இரண்டு வருஷங்களாக வியாதியுடன் போராடியும், கடைசியில் அவளுயிரைக் குடித்த வியாதியே வெற்றியடைந்தது. ஒரு நன்மையோ, தீமையோ நடந்தால், அதைப்பற்றி உலகம் பலவிதமாகப் பேசுமல்லவா? அதன்படி, என்னை வாழாதுவைத்ததற்காக, என் பிறந்தகத்தார் இளையாளுக்கு ஏவலோ, சூன்யமோ வைத்துக் கொன்றிருக்கலாமென்றும், என்னை வாழாதுவைத்த வதைதான் அந்த மனிதர் பெண்ணையே பறிகொடுத்து, அதே அதிர்ச்சியால் மூளை கலங்கித் தவிக்கிறாரென்றும், ஜனங்கள் பலவிதமாய்ப் பேசினார்கள். என்னை விலக்கிவைத்து சொந்தக்காரரே தம்பெண்ணைக் கொடுத்து அவளும் இரண்டு வயதுக்குழந்தையான சாந்தாவை வைத்துவிட்டு இறந்தபின், மூன்றாந்தாரமாக, பெண்கொடுக்க யாரும் துணியவில்லை. அவரும் மறுபடியும் என்னைவைத்துவிட்டு, கல்யாணம்செய்துகொள்ள விரும்பவில்லை. இத்தனை நாள் என்னைக் கவனிக்காமல் விட்டிருந்ததுபற்றி நானோ, அண்ணாவோ என்ன சொல்வோமோ என்ற யோஜனையுடன்தான் வந்தாராம்... என்கையில்...

அதுவரை வாய்திறவாது, பொம்மைபோல அமர்ந்திருந்த விஜயா, ஆச்சர்யத்துடன் குறுக்கிட்டு "என்ன! சாந்தா உனக்கு இளையாள் பெண்ணா? இத்தனை நாளாய் உன் வயிற்றில் பிறந்த பெண் என்றன்னா நினைச்சுண்டிருந்தேன்! அப்போ அப்படி எல்லாம் நடத்திய மன்னியா இப்போ இப்படி இருக்கிறாள்!".

சாரதா:—ஆமாம். நான் லலிதாவேறு, சாந்தாவேறு என்று பாவிக்கவில்லை. சாந்தாவுக்கு நினைவு தெரியாதிருந்தபோதே அவள் தாய் இறந்து, நானே அருமையாய் வளர்த்துவிட்டதால் அவளுக்கு தாயைப்பற்றி நினைவேயில்லை. நான்தான் அம்மா என்றெண்ணி அப்படியே கூப்பிடுகிறாள். என் வாழ்க்கை ஸம்பவம் தெரியாதவர்களுக்கு சாந்தாவைப்பற்றியும் தெரியாது. இதெல்லாம் நடந்த பிறகு, நாங்கள் இந்த ஊருக்கு வந்தோமாகையால் நாங்களே சொல்லிக்கொண்டால் தவிர தெரியக்காரணமில்லை. நான் புண்பட்ட உள்ளத்துடன் அன்பான வார்த்தைகளுக்கு ஏங்கி நின்றபோது உதறித்தள்ளிய அதே மன்னி, எதிர்பாராதபடி திடீரென்று ஏதோ ஒரு நல்லகாலத்தால் பணம், பதவி எல்லாவற்றிலும் அவளைவிட நான் பலபடிகள் முன்னேறியதும் என்னை லக்ஷ்யம் செய்து என் ஸ்னேகத்தை விரும்பினாள். "காலம் மாறும் போது மனிதர்களும் மாறுவார்கள்" என்பதை இதிலிருந்துதான் அறிந்தேன். கிராமத்தில் படிக்க வசதியில்லாததால், சங்கரை இங்கே வைத்துக்கொண்டு படிக்க வைத்தோம். லலிதா பிறந்த

முதல் சங்கர் அவளையேதான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாய்க் கூறிவருகின்றான். லலிதாவும் அப்படியே சொல்கிறாள். அவர்கள் இஷ்டப்படி செய்வதை நான், அண்ணா, மன்னி மூவரும் விரும்புகிறோம். ஆனால், இவர்மட்டும், இன்னும் கொஞ்சம் நல்ல இடமாய்ப் பார்த்துக்கொடுக்கணும் என்று ஆசைப்படுகிறார். காலம்பர கடிதத்தைப்படித்துவிட்டு, ஒன்றும் பதிலே சொல்லவில்லை"...என்றாள் கவலையுடன்.

விஜயா:—அத்ருஷ்டம் ஒன்றுமட்டும் நன்றாயிருந்துவிட்டால் குடிசையிலிருப்பவனுக்குக் கொடுத்தால்கூட குபேரஸம்பத்தாய் பெருகிவளரும். குபேரனைத் தேடிக்கொடுத்தாலும் அத்ருஷ்டம் பஞ்சையாயிருந்தால், சொத்தெல்லாம்பறந்துபோய்சாப்பாட்டுக்கே தாளம்போடவேண்டியதாய்விடுகிறது. நல்ல இடமும் பொல்லாத இடமும் அமைவது நம் கையிலில்லை என்றாலும், அதற்காகச் செய்து கொடுக்கும்போதே ஒன்றையும் கவனிக்காமல் சாதாரணஇடத்தில் கொடுக்கவும் மனம்வருவதில்லை. எந்தவிஷயத்திலும் உங்க அண்ணா பிள்ளை ஒன்றும் அப்படி மட்டமில்லை"...என்றுசொல்லிக்கொண்டேயிருக்கையில்,'சரிதான்,நீங்கள்கூட அவாகக்ஷிதானா?' என்றுகேட்டுக் கொண்டே, சாரதாவின் கணவன் நடராஜன் ஆபீஸிலிருந்துவந்தார்.

விஜயா:—நான் ஒருவர் கட்சியும்இல்லை. பொதுவாகத்தான் பேசுகிறேன். ஏதோ சுமாராய்உள்ள இடமாயும், ஒன்றக்குள் ஒன்றாயும் இருக்கிறது. ஆதிமுதல், சங்கரும் லலிதாவும் சொல்லிக்கொண்டிருக்கையில், அவர்களிருவருடைய அன்பையும் ஆசையையும் முறித்து, உங்களுடைய ஆசைக்காக வேறுஇடத்தில் கொடுப்பதென்றால், பாவம்! அவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றமாயும் வேதனையாயும் இருக்கும்? அதைவிட, இவர்கள் இஷ்டப்படியே செய்து உங்களுடைய ஆசைக்கு பெரியஇடத்தக்குச் செலவுசெய்யும் பணத்தை,லலிதாவுக்கு கணிசமான ஸ்திரீதனமாகச் செய்தால் எல்லோருக்கும் ஸந்தோஷமாகிவிடாதா? உங்களுடைய முயற்சியில் அவனுக்கு இன்னும் பெரியவேலையாகச்செய்துவைத்தால், அவனே பணக்காரனாகிவிடுகிறான்.

நடராஜன்:—சாரு! உன்கக்ஷிக்குத்தான் எல்லோரும் ஓட்டுக் கொடுக்கிறார்கள். உங்கண்ணாவிற்கு இன்று என்னபதில் எழுதினாய்?

"இன்னிக்கு நான் ஒண்ணுமே எழுதல்லை."

"அடுத்தவாரம் வந்து, நிச்சயதாம்பூலம் வாங்கிக்கொண்டு போகும்படி, நாளைக்கு எழுதிவிடு" என்றார்.

சாரதாவின் மனதிலிருந்த பெருஞ்சுமை நீங்கி, ஸந்தோஷமடைந்தாள். வீட்டிற்குக்கிளம்பிய விஜயாவிடம் தேங்காய், பழம், சக்கரை முதலியவைகளை வழங்கி அனுப்பினாள்.

---

* வெள்ளிவிழா சிறுகதைப்போட்டிக்கு வந்த கதைகளுள் பிரசுரத்திற்குத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளுள் 7-வது கதை இது.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

## விதவாச்ரமம் ஆரம்பம்

என் நீண்டகால மனோரதம் நிறைவேறும் காலம் வந்தது. நான் உபாத்திமைத் தொழில் மேற்கொண்டவுடன் மாணவிகள் எல்லாரும் என்னை 'அக்கா' என்றும் 'ஸிஸ்டர்' என்றுமே அழைக்க ஆரம்பித்தனர். முதல்தடவை இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ் லிஞ்சைப் பார்க்கப் போனபோது 'சகோதரி சுபலக்ஷ்மி' என்று எழுதி உள்ளே அனுப்பினேன். என்னை முதலில் பார்த்தவுடன் "சகோதரி' என்பது எதற்காக, என்ன அர்த்தம்?" என்று கேட்டாள். "என்னைப் போன்ற எல்லாருக்கும் நான் ஒரு சகோதரியாக இருக்கவேண்டுமென்பது என்விருப்பம்" என்று சற்று தயக்கத்துடனும் பயத்துடனும் சொன்னேன். அவள் முதலில் கடுமையான குரலில் பேசினாலும் பிறகு பிரியத்துடன் பேச ஆரம்பித்து "அது ரொம்ப சரி, நீ அப்படியிருக்கவேண்டுமென்பதே என் விருப்பமும்" என்று சொன்னாள். சென்னை வருவதற்கு முன்பு மிஸ் லிஞ்ச் என்பவள் கோவையில் இன்ஸ்பெக்ட்ரஸாய் இருந்தாள். அப்போது ஒரு முறை உபாத்தினிகள் சிலருடன் அவள் விவசாயக் கல்லூரியைப்பார்க்கப் போனபோது என் தகப்பனாரை சந்தித்து அவரது குடும்ப வர்த்தமானத்தைக்கேட்டு அவர் பெண்ணாகிய நான் சென்னையில் பி. ஏ. க்குப்படிப்பதைத் தெரிந்துகொண்டவுடன் அவள் மிகுந்த சந்தோஷமடைந்ததுடன்,

"நம் தென்னிந்தியாவில் பாலிய வயதில் புருஷனையிழந்த பெண்களின் வாழ்க்கை முழுவதையும் வீணாக்காமல் அவர்களைப் படிப்பித்து உபாத்திமைத் தொழிலுக்கு விட்டால் எத்தனையோ பெண் பாடசாலைகள் ஆரம்பித்து நடத்த முடியும். உயர்ந்த குடும்பத்தைச்சேர்ந்த ஹிந்துப் பெண்களே உபாத்தினிகளாக வந்தால் பொதுஜனங்களுக்கும் தங்கள் பெண்குழந்தைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி 15, 16 வயதுவரைக்கும் படிக்கவைப்பதற்கு ஊக்கமுண்டாகும். இப்போது இருக்கும் பெண்பாடசாலைகள் மிகமிகக் குறைவு. அங்கு இருக்கும் கிறிஸ்தவ உபாத்தினிகள் கிறிஸ்தவ மதத்தைப் பரவச்செய்வதில் ஊக்கமுடையவர்களாயிருக்கிறபடியால் பொதுஜனங்களுக்கு அவர்களிடம் அத்தனை நம்பிக்கையும் இல்லை. இந்த நிலைமையில் ஒரு விதவாச்ரமம் ஆரம்பித்து சிறுவயதுள்ள கைம்பெண்களைப் படிக்கவைக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அதற்கு உங்கள் பெண் எனக்கு மிகவும் உதவியாக இருப்பாள் என்று நம்புகின்றேன்"

என்று என் தகப்பனாரிடம் சொன்னாளாம். ஆகவே முதன்முதல் நான் அவளைப் போய்ப் பார்த்தபோது, அவளே வித்வாச்ரமம் ஆரம்பிக்க வேண்டியதைப்பற்றி என்னிடம் பேசினாள். இதன்பிறகு இது விஷயமாக அடிக்கடி சந்தித்தோம். 1912-ஆம் வருஷம் ஜூலைமாதம் கோடை விடுமுறைக்குப்பிறகு ஆச்ரமத்தை எங்கள் வீட்டிலேயே ஆரம்பித்துவிடுவது என்று தீர்மானித்தோம். அதற்கு வேண்டிய விளம்பரம் ஒன்று தயாரித்து அச்சிட்டு 1912 ஏப்ரல் மாதத்திலேயே பலபேருக்கு அனுப்பினோம். ஆச்ரமத்தில் சேர்வதற்கு 5 பெண்கள் தயாராயிருந்தனர். எங்கள் குடும்பத்திலேயே 2 வருஷங்களாக எங்கள் ஆதரவில் இருந்து படித்துக்கொண்டிருந்த அம்முக்குட்டி. சேலத்திலிருந்து 10 வயதான பார்வதி யென்பவள் அந்த வருஷம் ஆரம்பத்தில் எழும்பூரில் வந்து குடியிருந்துகொண்டு – அவள் பெற்றோர்கள், பாட்டியின் ஆதரவில் – படித்துக்கொண்டிருந்தாள். எங்கள் பக்கத்து வீட்டில் இரண்டாவது தாரமாக 50 வயதுக்காரருக்கு வாழ்க்கைப்பட்டு புருஷனை யிழந்து ஒரு குழந்தையுடன் 17,18 வயதுள்ள சீதாலக்ஷ்மி யென்பவள். மாயவரம்ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீசேஷு அய்யர் என்பவரின் மருமாள் லக்ஷ்மி என்பவள் ஒருத்தி. காளஹஸ்தியிலிருந்து எழும்பூரில் தெரிந்தவர்களிடம் இருந்துகொண்டு P. T. ஸ்கூலில் 2-ஆவது பாரத்தில் படித்துக்கொண்டுருந்த சுப்பம்மாள் என்பவள். இந்த ஐவரையும் சேர்த்து ஆச்ரமம் ஆரம்பிப்பதாகத் தீர்மானித்தோம்.

இதனிடையில் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. ஏப்ரல் மாதக்கடைசியில் வருஷப்பரிக்ஷைகள் எல்லாம் முடிந்து அதன் முடிவை மாணவிகளுக்குத் தெரிவித்துவிட்டு அன்றையதினம் 1 மணிக்கு கோடை விடுமுறைக்காக பாடசாலை மூடப்பட்டது. என் வேலைகளை முடித்துக்கொண்டு 2 மணிக்கு வீட்டுக்குவந்து எனக்குவந்திருந்த தபால்களைப் பார்க்கும்போது அதில் ஒன்று கோலாலம்பூரில் மிஸ்டர் சர்மா என்னும் ஒருவரிடமிருந்து அவர் தகுந்த உத்தியோகத்திலிருப்பதாயும், லீவு எடுத்துக்கொண்டு வந்திருப்பதாயும், முதல்மனைவி தவறிவிட்டதாயும், நான் ஒரு விதவாச்ரமம் ஆரம்பித்திருப்பதாகக் கேள்விப்பட்டதாயும், அதில் சற்று வயதான ஒரு கைம்பெண்ணைத் தான் விவாகம் செய்துகொண்டு கோலாலம்பூருக்கு அழைத்துப்போக விரும்புவதாயும் எழுதியிருந்தார். ஆச்ரமமே ஆரம்பிக்கவில்லை. அதற்குள் இந்த மாதிரி ஒரு கடிதத்தைக்கண்டவுடன் எனக்கு அது ஆச்சரியமாயும் தமாஷாயுமிருந்தது. ஏனென்றால், இந்த சீர்திருத்தத்தை நான் விரும்பி ஆமோதிக்கவேயில்லை. அதை ஆச்ரமத்தில் புகுத்துவதில் எனக்குச் சிறிதளவேனும் இஷ்டமில்லை. கைம்பெண்கள் நன்றாகப் படித்து உத்யோகம் செய்துகொண்டு சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதே எங்களுடைய நோக்கம். ஆகவே இந்த கடிதத்தை, அன்று இரவே விடுமுறைக்கு கோவைக்குப் புறப்படுவதற்குவேண்டிய மூட்டைகளை கூடத்தில் கட்டிக்கொண்டிருந்த என் தாயாரிடம், எடுத்துக்கொண்டுபோய்ப் படித்தேன். அந்த

சமயம் சுப்பம்மாள் என்பவள் பரிக்ஷையில் தனக்குத் தேறவில்லை, மேல்வகுப்புக்கு பிரமோஷன் ஆகவில்லை; இனி என்செய்வது என்று என் தாயாரிடம் சொல்லி அழுதுகொண்டிருந்தாள். நான் கடிதத்தைப்பற்றி என் தாயாரிடம் சொல்லிவிட்டு அதை ஒரு வேடிக்கையாகப் பேசிவிட்டு உள்ளே போய்விட்டேன்.

நான் போனவுடன் சுப்பம்மாள் என் தாயாரிடம் மெதுவாக அந்தரங்கமாக— தான் மிஸ்டர் சர்மாவை விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படுவதாகச் சொன்னாள். என் தாயாருக்கு திக்பிரமையாக ஆகிவிட்டது. அவசரமாக என்னைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னாள். நானும் பரவசத்துடன் ஸ்தம்பித்துவிட்டேன். பிறகு அவளைத் தனியாக அழைத்துச்சென்று, புனர்விவாகம் செய்துகொள்வதைக்காட்டிலும் படிப்பதே மேல் என்று ஆனமட்டும் சொல்லிப்பார்த்தேன். ஆயினும் அந்தப்பெண் தனக்கு படிப்பில் விருப்பமில்லையென்றும், விவாகம் செய்துகொண்டு குடித்தனம் செய்வதற்கே இஷ்டமாயிருக்கிறதென்றும் அதற்கு நான் உதவிசெய்யவேண்டுமென்றும் கெஞ்சினாள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்று இரவு கோவைக்குப் போகவேண்டும். மேலும் முதன்முதல் ஆச்ரமம் ஆரம்பிக்கும் சமயத்தில் ஒரு சீர்திருத்த விவாகம் செய்வதில் என்பெயர் சம்பந்தப்படுவது எனக்கு கட்டோடு இஷ்டமில்லை. புரொபஸர் லக்ஷ்மீநாராயணனுடையதாயார்— கண்ணுடிப்பாட்டி என்று நாங்கள் அழைக்கும்—மீனாக்ஷியம்மாள் வீட்டில்தான் சுப்பம்மாள் இருந்தாள். என்தாயாருடைய தங்கைபுதல்வன் வி. நடராஜன் அப்போது எங்களுடன் இருந்துகொண்டு எப். ஏக்குப் படித்துக்கொண்டிருந்தான். அவனைக் கொண்டு சுப்பம்மாளை மீனாக்ஷியம்மாள் வீட்டில் வந்து பார்க்கும்படி சர்மாவுக்கு எழுதவும், அவர்களிருவரும் சம்மதப்பட்டால் சுப்பம்மாவின் சகோதரனை வரவழைத்து விவாகத்துக்கு ஏற்பாடு செய்யும்படியும் மீனாக்ஷியம்மாளிடமும் நடராஜனிடமும் சொல்லிவிட்டு அன்றிரவே நாங்கள் கோவைக்குப் போய்விட்டோம்.

அந்த விடுமுறையில் சுப்பம்மாளை ஸ்ரீமான் சர்மா விவாகம் செய்துகொண்டு அவர்கள் நன்றியறியதலைத் தெரிவித்து எனக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, விடுமுறையாகி நாங்கள் சென்னைக்குத் திரும்புவதற்குள் அவர்கள் கோலாலம்பூர்க்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் ஐந்தாறு குழந்தைகளுடன் சந்தோஷமாக இப்பவும் அங்கேயிருக்கிறார்கள். ஏழெட்டு வருஷங்களுக்கு ஒரு முறை லீவு எடுத்துக்கொண்டு வரும்போதெல்லாம் சுப்பம்மாள் குழந்தைகளுடன் என்னைவந்து பார்த்துப்போவது வழக்கம். அவள் பெண்கள் இருவருக்கு விவாகம் ஆகி அவளுக்கு பேரன் பேத்திகள் கூட இருக்கின்றார்கள்.

இது சம்பந்தமான இன்னொரு வேடிக்கைகூட. சுப்பம்மாள் தங்கை யொருத்தி, சுமார் 20 வருடங்களுக்கு முன்பு ஒருதடவை ஐஸ்ஹௌஸில் என்னை வந்து பார்த்து, சுப்பம்மாளுக்கு விவாகம் செய்துவைத்ததுபோலத் தன்னையும் ஒரு தகுந்த

மனிதருக்குப் புனர்விவாகம் செய்துவைக்கவேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக்கொண்டாள். "கைம்பெண்களுக்கு புனர்விவாகம் செய்யும் வேலை என்னுடையதல்ல. சுப்பம்மாளுக்கு வேண்டுமென்று நான் செய்துவைக்கவில்லை; எதிர்பாராமல் நேர்ந்தகார்யம் அது" என்று சொல்லியனுப்பினேன். நிற்க.

கோடை லீவிலிருந்து வந்ததும், மிஸ் பாடர்ஸன், சுப்பம்மாவும் சர்மாவும் விவாகம்செய்துகொண்டபிறகு தன்னை வந்து பார்த்ததாயும் அவர்கள் விவாகத்துக்கு ஏற்பாடு நான் செய்ததாக அவர்கள் சொன்னதாயும் சொல்லி ஆச்ரமம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே இந்த மகத்தான சீர்திருத்த விவாகம் செய்ததைக் குறித்து சிரித்துக்கொண்டே என்னைப் பரிகசித்தாள். இதைப்பற்றி வெளியில் யாரிடமும் பிரஸ்தாபிக்கக்கூடாதென்றும் அந்த விஷயத்தை அப்படியே பரவவிடாமல் அடக்கிவிடவேண்டுமென்றும் அவளை வேண்டிக்கொண்டேன்.

ஜூலை மாதம் ஒரு சுபதினத்தில் எங்கள் வீட்டிலேயே அம்முக்குட்டி, லக்ஷ்மி, பார்வதி, சீதாலக்ஷ்மி இந்த 4 பெண்களுடன் ஆச்ரமம் ஆரம்பிக்கப்பட்டது. என் பெற்றோர்கள் நோவையிலிருந்தனர். சாவித்திரி கணவரும் சீமைக்குப்போய்விட்டமையால் வீட்டில் புருஷர்கள் யாருமில்லை. ஆகவே, வாடகைக்கு ஒரு வீடுகிடைக்கும்வரைக்கும் காத்திராமல் வீட்டிலேயே ஆச்ரமத்தை ஆரம்பித்துவிட்டோம்.

ஏப்ரல் மாதத்தில் 13-ந் தேதி என் சகோதரி பாலத்துக்கு வழக்கம்போல் டாக்டர் மக்னீல் வந்து ஆயுதப்பிரயோகம்செய்து ஆண் குழந்தை பிறந்து என் தகப்பனார் பெயரனாய் (சுப்ரமணியன்) வளர்ந்துவந்தான். எங்கள் சித்தியம்மாள் எங்களுக்கெல்லாம் பெரியவராய் எங்களைக் கவனித்துக்கொள்வதற்கு இருந்தார். பாலம், சாவித்திரி, ஸ்வர்ணம் மூன்றுபேரும் ஆச்ரமப் பெண்களுக்கு காலை மாலைகளில் பிரியத்துடனும் உத்சாகத்துடனும் பாடசாலைப் பாடங்கள் தெரியாதவற்றைச் சொல்லிக்கொடுப்பது வழக்கம்.

அந்தக்காலத்தில் மாதத்துக்கு ஒரு பெண் ஆச்ரமத்தில் வந்து சேருவதே அபூர்வம். பாவாடை சட்டையுடன் 9 வயது ருக்மிணி என்னும் ஒரு தெலுங்குப் பெண் வந்துசேர்ந்தாள். நெல்லூரிலிருந்து ருக்மிணி என்னும் 18 வயதுள்ள இன்னும் ஒரு தெலுங்குப் பெண்ணை மிஸ் லிஞ்ச் அங்கு ஸ்கூல் பரிசோதனைக்குப் போயிருந்தபோது பார்த்து அனுப்பினாள். கருப்பாய் புடவையை முழங்கால் வரைக்கும் தெலுங்குக்கட்டாய்க் கட்டிக்கொண்டு தலைமயிரை ஒரு பக்கம் சொருக்காக சொருகிக்கொண்டு ஒரு பெரிய துணிமூட்டையை இடுப்பில்வைத்துக்கொண்டு வந்துநின்றகாட்சி வேடிக்கையாயிருந்தது. தமிழ் ஒரு வார்த்தையும் தெரியாது. இங்கிலீஷ் எழுத்துக்கூட தெரியாது. பிரதி தினமும் என் சகோதரிகள் பாலமும் சாவித்திரியும் அவளுக்கு ஆங்கிலமும் கணிதமும் சொல்லிக் கொடுத்தார்கள். பாடசாலைக்கு அவளை அனுப்பாமல் வீட்டிலேயே வைத்துக்கொண்டு பாடம் கற்பித்தோம். நிரம்பவும் தாமதம், மந்தம். Father, mother இந்த 2வார்த்தைகள் சொல்லிக்கொள்ள 1 வாரத்

திக்குமேல் ஆயிற்று. அப்பவும் f என்னும் உச்சரிப்பு அவளுக்கு வரவேயில்லை. "பாதர்" என்றுதான் உச்சரிப்பாள். மதுரையிலிருந்து பாலாம்பாள் என்று ஒரு பெண். அவளும் சற்று தாமதப் பிரக்ருதிதான். அவளுக்கு என் தங்கை ஸ்வர்ணம் ராம சப்தம் (ஸம்ஸ்க்ருதம்) சொல்லிக்கொடுக்க முயற்சித்தது ஞாபகம் வருகிறது. தான் படிக்கும் அறையில் அழைத்துவைத்துக்கொண்டு திரும்பத் திரும்பசொல்லிக்கொடுப்பாள். அப்படியும் அவளுக்கு அது வரவேயில்லை. பிறகு அவளுக்கு ஸம்ஸ்க்ருதம் வேண்டாமென்றே தீர்மானித்தோம்.

ஆச்ரமம் ஆரம்பித்த புதிதில் பிரெஸிடென்ஸி காலேஜில் எனக்கு கணித உபாத்தியாயராயிருந்த ஸ்ரீமான் சேஷு அய்யர் அவர்கள் ஆச்ரமம் ஆரப்பித்தவிஷயத்தில் தனக்குள்ள சந்தோஷத்தைத் தெரிவிக்கவந்தார். ஆச்ரமம் கல்வியபிவிருத்திக்கு மாத்திரமேயிருக்க வேண்டுமென்றும் புனர்விவாகம் முதலிய சீர்திருத்தங்களை அங்கு ஆரம்பிக்கக்கூடாதென்றும் அவரது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். நல்லகாலமாக சுப்பம்மாள் விவாகவிஷயம் அவருக்குத் தெரியாததைப்பற்றி சந்தோஷித்தேன்.

என் தகப்பனாருடைய சிநேகிதர் ஒருவர் ஆச்ரமத்தைப்பற்றி என் தகப்பனாரிடம் பேசியபோது "என்ன, ஸார்! உங்கள் பெண் விதவாச்ரமம் ஆரம்பித்திருக்கிறாளாமே, நன்றாய் நடந்தால் சந்தோஷந்தான். இருந்தாலும் அது நீடித்து நடப்பது சந்தேகந்தான். 100 குடுமிகள் சேரும் 4 கொண்டைகள் சேராது. பெண்கள் சேருமிடத்தில் சண்டையும் பூசலுந்தான்" என்று சொன்னாராம்.

அக்டோபர் மாதத்தில் எங்கள் வீட்டுக்குச் சமீபத்திலேயே ஹைரோட்டில் "ஆதி காட்டேஜ்" என்னும் ஒருவீடு 25 ரூபாய் வாடகைக்கு அமர்த்தி அதில் ஆச்ரமத்தை ஸ்தாபித்தோம். ஸர். ராமேசத்துக்குப் பந்துவான அன்னபூர்ணி என்பவள் ஸ்ரீகாகுளத்திலிருந்தும், குழித்தலை மகாதேவய்யர் பெண் பாலம், டிப்டி கலெக்டர் சுந்தரராவ் பெண் அகிலா, மைசூரிலிருந்து பத்மாபாய், இப்படியாக சில பெரிய குடும்பங்களிலிருந்தும் செல்வமான குடும்பங்களிலிருந்தும் சில பெண்கள் வந்துசேர்ந்தது மற்றவர்களுக்கும் ஒரு தூண்டுதலாயிருந்தது. இதில் சிலர் பெரியபடிப்புக்களில் சேர்வதற்குத் தகுதியில்லாமலிருந்தனர். ஆகவே, ஒரு ஆங்கிலோ இந்திய உபாத்தினி Mrs. Briggs என்பவளை இந்தப்பெண்களுக்கு வீட்டிலேயே பாடங்கள் கற்பிப்பதற்கு ஏற்படுத்தினோம்.


முதற் பாரத்துக்குவேண்டிய படிப்பை வீட்டிலேயே கற்பித்துப் பிறகுதான் முதல் அல்லது இரண்டாவது பாரத்தில் அவர்களைச் சேர்ப்பது வழக்கமாயிற்று. மிஸ் லிஞ்சின் முயற்சியால் இந்தப் பெண்களுக்கு மாதம் 12 ரூபாய் கவர்ன்மெண்டிலிருந்து கொடுக்கும்படி ஏற்பாடாயிற்று. ஆகவே, பொதுஜனங்களிடமிருந்து ஐந்தாறு மாதங்களுக்குத்தான் பொருள் வசூலித்து ஆச்ரமத்தை நடத்தினோம். பிறகு கவர்ன்மெண்ட் உதவியிலேயே அநேகமாய் ஆச்ரம செலவு நடந்தது. வீட்டிலேயே பிரைவேட்டாக பாடம்கற்பித்து, உபாத்தினிகளுக்கும் இன்னும் சில அதிகப்படி

செலவுகட்கும் பொதுஜனங்களின் உதவி வேண்டியிருந்தது. மிஸஸ் காட்ப்ரீ Mrs. Godfrey என்பவளையும் அமர்த்தி, காலையில் ஒருத்தி மாலையில் ஒருத்தியாக வீட்டிலேயே இருந்த மாணவிகளுக்கு பாடம் கற்பிக்கப்பட்டது. ஸ்ரீமதி பங்கஜம்மாள் என்னும் வைஷ்ணவப் பெரியவர், சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் அன்புடன் வந்து இலவசமாக ஸம்ஸ்க்ருதம் சொல்லிக்கொடுத்தார். காலைமாலைகளில் ஸ்தோத்திரப்பாடல்கள், மதவிஷயமான பாடங்கள் ½ மணி நடக்கும்.

சேலத்திலிருந்து மாத்துவஜாதியைச் சேர்ந்த 10 வயதுள்ள ஸீதா என்பவளை அவள் புருஷன் இறந்த 15, 20 நாட்களுக்குள் அவள் தகப்பனார் கொண்டுவந்து விட்டார். சட்டை பாவாடை கட்டிக்கொண்டு உலகந்தெரியாத சிறுவயதுக்குழந்தை. "இத்தனை நாளாக யார் யாரோ வந்து என்னைக் கட்டிக்கொண்டு அழுது என்னையும் அழும்படிச் செய்தார்கள். இங்கு நான் அழாமலிருக்கலாமா?" என்று அந்தப் பெண் கேட்டபோது மிகவும் பரிதாபமாயிருந்தது. "நீ அழவே வேண்டாம், சந்தோஷமாகப் படித்துக்கொண்டு இங்குள்ள உன் சகோதரிகளுடன் விளையாடிக்கொண்டிருக்கலாம்" என்று அவளை சமாதானம் செய்தோம். ஆச்ரமத்தைப் பார்ப்பதற்கு ஸர் சிவஸ்வாமி அய்யர், ஸர் சதாசிவய்யர், டைரெக்டர் மிஸ்டர் ஸ்டோன் முதலான பெரியவர்களை மிஸ் லிஞ்ச் அவ்வப்போது அழைத்து வருவதுவழக்கம். ஆக, ஆச்ரமமாணவிகள் ஒரு குடும்பத்தைப்போல ஒற்றுமையாய், சந்தோஷமாய், நல்ல வித்தை, பக்தி அறிவு விருத்தியுடன், சித்தியை தாயாராகவும் என்னை தமக்கையாகவும் பாவித்து வந்தார்கள். இப்படியாக ஒரு வருஷம் ஓடிச் சென்றது.

(அடுத்த இதழில் "ஊர்வம்பு")

---



## 28

சுசீலாவை கோபூஜாமடத்தில் கண்ட அவளுடைய எதிரிகளில் ஒருவன் சினிமாக்காரர்களுக்குத் தந்தியடித்துவிட்டுப் பதிலுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். சென்ற அத்யாயத்தில் சொல்லியபடி, சினிமாக்காரர்கள் கிருஷ்ணமூர்த்தியின்மூலம் ஏதாவது விஷயமறியலாம் என்று வந்ததும் பங்கஜத்தைக் கண்டதும் கிருஷ்ணமூர்த்தியின் விரக்திநிறைந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவர்கள் திரும்பிச் சென்றதும் சகலமும் இந்தத்தந்தி வருவதற்குமுன்பு நடந்த விஷயமாகும். தந்தியைக் கண்டவுடனே நேரே மோட்டாரில் முக்யமானவர்கள் வந்துவிட்டார்கள்.

மடத்து வாசலில் காத்திருந்த மனிதன் தாங்கள் பார்த்த சகல விவரத்தையும் சொல்லிவிட்டு "எஜமான்! நாம் இப்படியே இந்த வேஷத்துடன் சென்றால் நம்மை மதிக்கமாட்டார்கள். பக்தர்கள் போல் வேஷமணிந்துகொண்டு நம்மில் யாராவது கோபூஜாமடத்திற்கு நிறைய பொருள்கொடுக்கப்போவதாயும் அதற்குமுன்பு மடத்தைப் பார்வையிட வந்திருப்பதாயும் ஒரு செய்தியை பெரிய ஸ்வாமிகளுக்கு அனுப்பி, அவர்களை நம்பச்செய்து பிறகு நாம் மடத்திற்குள் சென்று நான்கு நாட்கள் இங்கேயே தங்கி உளவு பார்த்துக்கொள்ளலாம்" என்று எல்லோருமாகப்பேசிமுடித்துக் கொண்டு, உதயத்திற்கு நடக்கும் கோபூஜைக்குமுன்பு கடிதம் எழுதி உத்திரவு பெற்றுக்கொண்டு பரமபக்தசிகாமணிகளைப் போல் வேஷ்டியும் நாமமும் விபூதியும் தடபுடலாக அணிந்து கொண்டு பூஜாமண்டபத்திற்குள் வந்தார்கள்.

கூட்டமோ சொல்லத்தரமில்லை. ஆண்களும் பெண்களும் ஏராளமாக நிரம்பி இருந்தார்கள். கோமாதாவைப் பற்றிய பாடல்களை எல்லோரும் ஏகோபித்த மனத்துடன் பாடும் ஆனந்த ஒலியின் அற்புதம் நாஸ்திகனையும் சற்று மெய்சிலிர்க்கத்தான் செய்யும் என்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

இப்படி பக்தர்களைப்போல் வேஷமணிந்து உள்ளேவந்த ஸினிமாக்காரர் களுக்கு முதலில் இந்தக் காட்சியைப்பார்க்கும்போது "அடாடா! இத்தகைய ஒரு சிறந்த காட்சியைப் படமாக எடுத்தால் எத்தனை அழகாக இருக்கும்? பொதுஜனங்களை எப்படித்தான் வசீகரிக்கச் செய்யலாம்!" என்கிற எண்ணமே உண்டாகியது. இத்தகைய காட்சிக்கே ப்ரதான இடம்வைத்து முதல்தரமான கதையை எழுதச் செய்து படம்பிடித்தால் எப்படித்தானிருக்கும்...என்ற ஆசை மிரு உண்டாகியது. பாட்டு, பூஜை முதலியன முடிந்தவுடனே ஒரு மணியடித்தது. அடுத்த க்ஷணமே எல்லோரும் அமரிக்கையாயும் சாந்தமாயும் அந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய ஆல மரத்தடிக்குச் சென்று அமைதியாய் உட்கார்ந்தார்கள்.

ஆலமரத்தடியிலமைக்கப்பட்டிருக்கும் ஆஸனத்தில் கம்பீர மான தோற்றத்துடன் பெரியஸ்வாமிகள் உட்கார்ந்து கைகளை அமர்த்தி சகலரையும் உட்காரச்செய்து ஆசீர்வதித்த பின்னர்,

"அன்பர்களே! அடிமையின் வணக்கம். மனிதன் எப்படி இருக்கவேண்டும், எப்படி இருந்தால் பகவானின் முகோல்லாஸத் திற்குப் பாத்திரமாவான், எது மனிதனின் கடமை என்பதுபற்றி அடிமை நேற்றயதினம் சொல்லிற்று. இன்றையதினம் அடிமை சொல்லப்போவது – மனிதர்களை மனிதர்களாகச் செய்வது எது? என்ற விஷயத்தைப்பற்றியேயாகும்.

நல்ல உயர்ந்த வைரமாயினும் அதை சிறந்தமுறையில் பளபளப் பாக மின்னச் செய்வதற்கு சாணைபிடிப்பதுதான் அதிமுக்யம். அச்சாணை பிடிக்கும் கருவியோ ஒரு சிறிய ஆயுதம். சிறந்த வைரத் தைச் சிறப்பிப்பது ஒரு சிறிய எந்திரம் என்பதை மறக்காதீர்கள். அதேபோல் ஒரு சிறிய விளக்கின் ஜோதியே மகத்தான அந்தகாரத் தைப்போக்கி ப்ரகாசிக்கச் செய்கிறது. பத்தரைமாத்துத் தங்க மாயினும் அதை நெருப்பிலிட்டுக் காய்ச்சி மெருகேற்றி உருவாக்கு வது ஒரு சிறிய கருவியேயாகும். அதேபோல் ஆறு அறிவு படைத்த உயர்ந்த மனிதப்பிறவியாகப் பிறந்துள்ள நம்மை ப்ரகா சிக்கச்செய்யும் எந்திரம் சீரிய ஒழுக்கமும் சிறந்த பக்தியும் தரும சிந்தனையும் கூடிய விளக்கேயாகும்.

அத்தகைய உத்க்ருஷ்டமான விளக்கை ஏற்றி, அணையாமல் என்றென்றும் மங்காத ஜோதியுடன் வைத்துத் தான் ப்ரகாசிக்கும் முறையில் மனிதன் தன் காலத்தைக் கடத்த,வழி வகுத்துக்கொள்ள வேண்டும். முதலில் தான் பிறந்ததை எண்ணிப்பார்த்தால் உடனே பிறப்பின் நிழலான இறப்பும் கூடவே கண்ணிற்குப் புலனாகும். அம்மாதிரி புலனாகும்போது ஒரு க்ஷணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் பிறந்தோம்...நாம் இறக்கப்போவதும் நிச்சயம். இதற்கு மத்தியில் உருண்டோடி மறைந்த காலத்தை நாம் கண் முன்பு கொண்டுவந்து ஊன்றிக் கவனித்துப் பார்க்கவேண்டும், பிறக்கும்பொழுது நாம் எப்படி அறிவுகூட இல்லாமல் எத்தகைய பொருளும் உடன்கொண்டுவராமல் நிராயுதபாணியாய்ப் பிறந் தோமோ அதேபோல், இறக்கும்பொழுதும் ஒன்றையும் கொண்டு போகப்போவதில்லை. எத்தனை லக்ஷக்கணக்கில்—நல்ல முறையிலோ தீயமுறையிலோ, லஞ்சம்வாங்கியோ, பிறரை வஞ்சித்தோ, உத்த மர்களை நோகச்செய்தோ, நல்ல சீலவதிகளைக் கற்பழித்தோ, தகாதமுறைகளில் காலத்தை வ்யர்த்தமாக்கியோ, பணத்தைச் சேர்த்துக்கொண்டாலும் ஒரு செல்லாக்காசுகூட வரப்போவ தில்லை. அவர்களுடைய சாமர்த்யம் இம்முறையில் படுதோல்வி யடைந்து பாழாகித்தான்போகும். ஒருதூசியைக்கூட தம்முடன் எடுத்துச்செல்ல சக்தி கிடையாது.

ஆனால், மனிதர்களின் கண்களுக்குத் தெரியாத மகாசக்தி வாய்ந்த இரண்டு பொருள்கள் இருக்கின்றன. அதை அவர்கள் எப்

படியும்கூடக்கொண்டுபோயே தீரவேண்டும். மற்றபொருள்களைப் படிக்கொண்டுபோகமுடியாதோ! அப்படி, இவ்விரண்டில் ஒன்றை விட்டுவிட்டுப் போக கஜகர்ணம் கோகர்ணம் போட்டாலும் முடியாது. அந்த இரண்டு பொருள்கள்தான் பாவம் புண்ணியம் என்று கூறப்படும் அதிதசக்தி வாய்ந்தவையாகும்.

மகா ச்ரேஷ்டராகிய பட்டினத்தார் இந்த மகத்தான விஷயத்தைப்பற்றி வெகுவெகு அத்புதமாகப் பாட்டுக்களை மழைபோல் பொழிந்துதள்ளியிருக்கிறார். பிறக்கும்போழுது கோண்டுவந்த தோன்றுமில்லை; மண்ணில் இறக்கும்போழுது கோண்டுபோவ தோன்றுமில்லை...என்கிற அந்த மகானுபாவனின் வாக்கை ஒருவன் நன்றாகஉணர்ந்துவிட்டானேயானால்...மரணதேவதைக்குத் தான் என்றும் அடிமை என்ற உண்மையை ஒரு சிறிதளவாவது நினைத்துப் பார்ப்பானேயானால்—மனித ஜென்மம் எடுத்த எவனும் அதிகமாகப் பாவத்தையே செய்யத் துணியமாட்டான். உள்ளதுள்ளபடி அறிந்து தெளிந்தஞானத்தைப் பெற்றுவிட்ட மனிதன் பாதகத்தைச் செய்யக் கனவிலும் நினைக்கமாட்டான்.

பாப புண்ணியத்தின் தத்துவத்தை ஆசாரியன்மூலமாகவும் ஆசானைப்போன்று அறிவுபுகட்டக்கூடிய உயர்ந்த புத்தகங்கள் மூலமாகவும் சிறந்த ஞானிகளின்சகவாஸம் நிறைந்த சேர்க்கையின் மூலமாயும் சத்சங்கங்களின் மூலமாயும் அறிந்த விவேகி, புண்ணியத்தையே செய்ய முற்பட்டு அதற்காகவே பாடுபடுவானேயன்றி மற்றதில் நாட்டம்கொள்ளமாட்டான்.

இம்மையில் மனிதன் செல்வத்தைத் தேடிச் சம்பாதிக்கவேண்டியதும் ஒருகடமைதான். ஆனால், சன்மார்க்கத்தில் நல்ல முறையில் செலவிடுவதற்காகச் சம்பாதிக்கவேண்டுமேயன்றி, பாபகாரத்திற்கே ஏதுவாயுள்ள மாயச்சுழலில் சிக்கி அதையே பேரின்பமாக எண்ணி விநாசத்தைத் தேடிக்கொள்ளும் விஷயத்திற்காகப் பொருள்தேடக் கூடாது. இகத்திற்குச் சம்பாதிக்கும் பொருள் கண்ணுக்குத் தெரிந்த செல்வ போகபாக்யங்களாகும். பரத்திற்குச் சம்பாதிக்கும் பொருள் அழியாத ஜீவசக்தி பெற்ற அருள் என்னும் பொருளாகும். இதை மக்களறிவதற்காகவே

அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை ; போருள் இல்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு.

என்ற குறள் உண்டாகியது.

பொருளினால் கிடைக்கும் சாச்வதமற்ற, ஆனால், ஆளைமயக்கும் இன்பங்கள்முற்றும் பொருள் கையிலிருக்கும்வரையில்தான் செல்லுமேயன்றிப் பொருள் வரண்டுவிட்டால்,

கல்லானே யானாலும் கைப்போருள்ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்றங்கு எதிர்கோள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்றேடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சோல்.

என்ற நிலைமையில் தாம் மதிப்பாக எண்ணிய மனிதர்களின் முன்பே அவன் உயிருடனே இருந்தும் செத்தபிணம்போலாகிவிடுவான். அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல்...என்ற பாடல்படி கொத்தித் தின்று இன்புற்றுத்தானும் பாபத்தை மூட்டைகட்டிக்கொண்டு பிறரையும் பாவியாக்கிவிட்டு ஓட்டம்பிடிப்பவர்கள்தான் கூட்டங் கூட்டமாகச் சேருவார்களேயன்றி, கொட்டியும் ஆம்பலும் போல் ஒட்டி உலர்வார் கூட்டம் அதிலும் இக்கலியில் கிடைத்தல் அரிதிலும் அரிது. ஒரு கட்டடத்தைக் கட்டுவது மிக மிக கஷ்டம். அதை உடனே இடித்துவிடுவது வெகு சுலபம். அதுபோல் புண்ணியத்தைச் சம்பாதிக்க ப்ரயத்தனப்படுவதும் கஷ்டம். சம்பாதித்ததைத் தொலைத்துவிடுவது சுலபத்திலும் சுலபம், மனித வாழ்வைப் பாழ்படுத்தும் மாயாமோகங்களுக்கு மனிதன் அடிமையாகாமல் தாமரை இலைத் தண்ணீர்போல வாழ்க்கையை நடத்துகிறவர்களுக்கு எத்தகைய பந்தமும் கிட்டே அணுகாது. அம்மாதிரி பரிபக்குவம் உண்டாவதற்கு முதலில் மனது சரியானமுறையில் பண்படவேண்டும், அவ்வாறு பண்படச்செய்யும் கருவி— மூல எந்திரம்— சத்சகவாஸம் என்பதுதான்.

சத்சகவாஸம் செய்வதன் பலன் மனிதனுடைய புத்தியை இதர விகார விஷயங்களிலோ, பேராசையும் மோகமும் காமக்ரோதம் முதலிய பாபச்செய்கைகளிலோ செல்லவிடாது, உயர்ந்த விஷயங்களையும் மனித தர்மத்தின் சிறப்புகளையும், பக்தியின் மேன்மைகளையும் பகவன் நாமத்தின் ப்ரபாவத்தையும் சதா எடுத்துக் கூறி மனத்தை ஒரு திடமான நம்பிக்கையில் நிலைநிறுத்திப் பயன் பெறச்செய்யும்.

பஞ்சுப்பொதியில் ஒரு சிறுநெருப்புபட்டால் கூட அப்பஞ்சு முற்றும் எப்படி பஸ்மீகரமாகிவிடுகிறதோ அதேபோல் மனிதன் அளவற்ற பாபங்களைத் தெரிந்தும் தெரியாமலும் செய்துவிட்டால் கூட, பிறகாவது தான் செய்துவிட்ட பயங்கரமான பாபங்களை உணர்ந்து பகவானிடம் சரணாகதி செய்து வேண்டி நம் பஜனையைச் செய்தானேயானால், அந்த சிறந்த நாமமே சிறிய நெருப்புப் பொறியாகி பாபக்குவியலை அப்படியே பொசுக்கிவிடும். இந்த அபூர்வ ரகஸியத்தைக்கூட மக்கள் அறியாமலிருப்பதால் மேலேமேலே பாபத்தையே செய்து பாபியாகி ஏழேழு ஜென்மாக்களுக்கும் இந்தப் புதையலைத் தேடிக்கொள்கிறார்கள்.

முக்யமாக, மக்கள் கவனிக்கவேண்டிய சூக்ஷ்மரகஸ்யம் எது என்றால், பிறக்கும்பொழுது கொண்டுவந்தது ஒன்றுமில்லை; ஆனால், மண்ணில் இறக்கும்பொழுது பாபமூட்டையைக் கட்டாயம் கொண்டுபோயே தீரவேண்டும். தான் தேடும் செல்வத்தை என்ன பாடுபட்டாலும் கொண்டுபோக முடியாது என்கிற உண்மையைத் தான் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். பகவானை தெரிந்து பக்தி செய்தாலும் புண்ணியமுண்டு, தெரியாமல் செய்தாலும் புண்ணியமுண்டு. இதற்கு ஒரு மாட்டிடையன்கதை நிதர்சனம் உண்டு.

எத்தகைய அறிவும் படிப்பும் ஞானமும் இல்லாத ஒருஇடையன் தன் மாட்டைத் தேடிப்பிடிக்கும் முறையில் அலையும்போது அம்முரட்டுமாடு நாலாபுறமும் ஓடிஓட்டங் காட்டியதாம். அதைசுற்றிச் சுற்றி ஓடிப்பிடிக்கையில் மத்தியிலிருந்த ஒருசிறிய இடிந்த கோயிலைப் பலதரம் சுற்றினானும். தன் சுயநலத்திற்காக மாட்டைத் தேடிப்பிடிக்க அவன் சுற்றினானேயன்றி அங்கு ஒரு பாழுங் கோயில் இடிந்தது இருக்கிறது. அதில் ஒரு கடவுள் சிலைஇருக்கிறது என்பதை அவன் கனவில்கூடக் கருதவில்லை.

ஆனால், மகாவாத்ஸல்யகுணம் நிறைந்த ஜகத்ரக்ஷகனாகிய பகவான் "அடாடாட!......நம்குழந்தை வெய்யிலில் நம்மைச் சுற்றுகிறானே" என்று பூரித்துப்போய் மாட்டையும் பிடித்துக்கொடுத்து இறுதியில் மோக்ஷத்தையுங் கொடுத்து ரக்ஷித்ததாக ஒரு சிறிய ப்ரமாணக்கதை உண்டு. பகவான் இருக்கிறான் என்பதை அறியாமல் சுற்றியபோதே கருணைவள்ளலான கடவுள் இத்தகைய அன்புடன் ரக்ஷித்திருக்கையில் பகவானை த்ரிகரணசுத்தியாய் அறிந்து பக்தி செய்து வணங்கினால் அந்த வள்ளல் எப்படித்தான் க்ருபைசெய்து ரக்ஷிப்பார் என்பதை ஒருக்ஷணம் சிந்தித்துப்பார்த்தால் போதும்.

பரமகாருணிகனான ரக்ஷகனை அடியோடு மறந்துபோய் கண்டதே காட்சி கொண்டதே கோலம்...என்கிற அறிவுகெட்ட முறையில் ஆனந்தமற்ற அநித்யங்களையே நித்யமாயும் பேரானந்தமாயும் எண்ணி அத்தகைய இழிந்த காரியங்களையே செய்யும் மனிதர்கள் ஒருசமயம் இல்லாவிடில் ஒருசமயம் அதன் துன்பத்தை, தீமையை அனுபவித்தே தீரவேண்டுமென்பதை மறக்கக்கூடாது.

ஒரு உதாரணம்: நம் சரீரத்தில் சொறிபடை என்கிற ஒருவிதமான வ்யாதிஉண்டாகும்போது அது அசாத்யமாக அரிப்பு எடுக்கும். அந்த இடத்தைச் சொறிவதற்கே கைகள் தூண்டும். சொறியும்போது அதுவே வைகுண்டமோ! சொர்க்கமோ! என்று ஆனந்தப் பூரிப்பையடைந்து மெய்மறப்பான். ஆனால், அதே ஆனந்தம் அடுத்தக்ஷணமே விபரீத எரிச்சல் உண்டாக்கி உபத்திரவிப்பதோடு சொறிந்த இடத்தில் துர்நீர்கள் உண்டாகி வழிந்து அது பட்ட இடமெல்லாம் இதேபோல் படை உண்டாகி சொறிந்த விரல்களின் நகத்தில் இந்த விஷக் கிருமிகளின் ஆக்ரமிப்பால் அது ஆகாரத்துடன் உள்ளே சென்று இன்னும் குறிப்பிடமுடியாத பலவித கொடிய வ்யாதிகளை உண்டாக்கி மனிதனையே ஒழித்துவிடும். இந்த ஒரு உதாரணத்தையே அறிவுள்ள மனிதர்கள் நன்றாக வைத்துப் பார்த்தால் இந்த தினவு சொறியும் சுகமும் பின்னர் உண்டாகும் பாதையும் போலத்தான் துஷ்டர்களுடைய சகவாசத்தின் முடிவு என்று திரமாக உணரலாம்.

துஷ்டர்களாகிய துர்வ்யாதி மனிதனைப் பிடித்த உடனே தினவு சொறியும் சுகம்போல் அவர்கள் பேச்சும் செய்கையும் உண்டாகும். அதன் முடிவு எரிச்சலில் கலந்து மனிதனையே நாசமாக்கிவிடும். துஷ்டவ்யாதிகளுக்கு இடமளிக்காது ஆரோக்ய

மாக இருக்கப் பாடுபடுவதுபோல துஷ்ட சகவாஸத்தையும் நாடாது அதைவிரட்டியடித்து ஜெயிக்கும் சக்தியை முதலில் பெற்றுவிட்டால் தீமை என்பதும் பாபம் என்பதும் மனிதனை அண்டவே முடியாது...

என்று ஸ்வாமிகள் சொல்வதைக் கேட்ட இங்கு வேஷதாரியாகவந்துள்ள சினிமாக்காரனின் மனது அவனையறியாது ஏதோ மாதிரி புதிய உணர்ச்சியினால் கவரப்பட்டு தன்னையேமறந்து உட்கார்ந்திருந்தான். "இதுவரையில் எத்தனைவிதமான பாதகங்களைச் செய்து இன்று லக்ஷாதிபதியாகி யிருக்கிறோம்...எத்தனை இளம் பெண்களைக் கற்பழித்தும் புதிய ஆசைகாட்டிப் பசப்புவார்த்தைகளால் அவர்கள் புத்தியை மயக்கிப் பாதகமூட்டையை அவர்கள் தலைமீதும் சுமத்திக் குடும்பத்தைவிட்டும், பெற்றோரைவிட்டும், கணவனைவிட்டும், மக்கள் மனிதர்களைவிட்டும் வெளியேறித் நம்முடன் வரும்படிக்குச் செய்துவிட்டோம்...என்பதுபோன்ற எத்தனையோ எண்ணங்களும் செய்கைகளும் அவன் இதயக்கடலில் பொங்கிப்பொங்கி அலை அலையாய்மோதி நினைவூட்டி அவன்மூளையைச் சிதறவடிக்கின்றன.

இன்னதென்று விவரிக்கமுடியாத நிலைமையில் தவிப்பதால், தான் எதற்காக வந்தோம் என்கிற காரியத்தையே மறந்துபோய் ப்ரமை பிடித்தவன்போல் உட்கார்ந்திருப்பவன் தன்பக்கத்திலிருக்கும் தன்னை வரவழைத்த மனிதனைத் திரும்பிப் பார்த்தான். தன்னோடு வந்த ஒருவரையும் காணவில்லை. திடுக்கிட்டு வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான். கண்ணுக்கெட்டியவரையில் யார்யாரோ கும்பல் நிறைந்திருக்கிறதேயன்றி இவர்களைக்காணவில்லை. வெகு ஆச்சரியமும் அதிர்ச்சியும் பொங்க மணி என்னவென்று பார்க்கக் கடியாரத்தைப் பார்த்தான்.

வைரம் பதித்த சங்கிலியுடன்கூடிய உயர்ந்த கடிகாரத்தைக் கையில் காணாததால் மறுபடியும் அலறியவாறு இடுப்பில் சொருகி இருந்த மணிபர்ஸைப் பார்த்தான். அதையுங்காணவில்லை. சரியானபடி தன்னைக் கொள்ளையடித்துவிட்டுப் போயிருப்பதாக ஒரு நொடியில் அறிந்துகொண்டதும் அவன் சரீரம் பூராவும் குபீர் என்று வெந்நீர் வெள்ளம் பெருகுவதுபோல் பெருகித் தத்தளிக்கச் செய்தது'

இத்தனைநேரம் நிம்மதியாகக் காதில் விழுந்த வார்த்தைகள் இப்போது காதில் விழாது கலக்கிக் குழப்பிவிட்டபோதுதான் சொறி, படை இவைகளை உபமானம் வைத்து ஸ்வாமிகள் பேசியதன் உண்மைத்தத்துவம் பளிச்சென்று இதயத்தில் காலக்கண்ணாடியின்மூலம் தெரிந்ததும் அவனையறியாது ஒரு துள்ளு துள்ளினான். அந்த இடமும் அக்கூட்டமும் அப்படியே தட்டாமாலை ஆடுவதுபோல் தோன்றியது.

ஸ்ரீலா கோபூஜா மடத்திற்கு வந்தபிறகு முற்றிலும் அபூர்வமான புனர்ஜன்மம் எடுத்துவிட்டவள்போல் காணப்படுகிறளே யன்றி, அப்பழக்குகள் அவளிடம் அணுப்ரமாணமும் காணப்படவில்லை. இந்தத்தொழிலை அவள் எத்தனை உத்ஸாகத்துடன் செய்து இன்புற்றுத் தன் பாதகங்களைத் தீர்க்கிறள் என்பதை அவளுடைய இதயகமலத்தில் வீற்றிருக்கும் அந்தர்யாமியான சர்வேச்வரன்தான் அறியவேண்டுமேயன்றி மற்றையோர் அறியமுடியுமா?

ஆனல், இவள் சரியானபடி திருந்திவிட்டாள் என்பதை கிழவிமூலமறிந்த ஸ்வாமிகள் இவளை மடத்திலேயே வந்துவிடும்படியாகப் பலதரம் சொல்லியனுப்பியும், தனக்கு இந்தஇடமும் இத்தொழிலுமே சாச்வதமாகக் கொடுத்துத் தன்னை ஒருபொருளாக்கிப் பாபக்குவியலிலிருந்து தன்னைக் கரைசேர்க்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு இதேதொழிலில் நிலைத்துவிட்டாள்.

தன்னை இங்குக் கொண்டுவந்துசேர்த்த கடவுளை வாயார வாழ்த்தி மனதார வணங்கி மகிழ்ந்தாள். முதன்முதல் தான் இங்கு வந்தபோது இருந்த எதிரிகளின் பயம் அடியோடு ஒழிந்துவிட்டது. அதைப்பற்றி எத்தகைய விஷயமும் அறிந்துகொள்ளக்கூட அவள் உள்ளம் விரும்பவில்லை. தான் இனி உலகபாசபந்த சம்பந்தங்கூடிய எந்தவிஷயத்திலும் கலந்துகொள்ளக்கூடாது என்றும் தன்னுடைய காலம் சீக்கிரம் முடிவடைந்துவிடவேண்டும் என்றும் ஒரே தீவிரமான சங்கல்பமும் ப்ரார்த்தனையும் செய்துகொண்டாள். எனினும், தன்னல் அநாதைகளாகிவிட்ட தன் பெற்றோர்களைமட்டும் ஒருமுறை பார்த்துவிட்டாவதுதான் சாகவேண்டும் என்ற ஒரே ஒரு ஆசையைமட்டும் அவளால் தடுக்கமுடியவில்லை. அதற்கு வசதியும்கிடைக்க இனி ப்ரமேயமில்லை என்றறிந்ததால் மவுனமே பரமசாந்தியளிக்கும் கருவி என்றதை உணர்ந்து பெரும்பாகமும் மவுனத்திலேயே ஆழ்ந்தாள். நோயாளிகளிடம் பேசுவதைத் தவிர மற்றப்படி வாய்திறப்பதே இல்லை. தனக்குத்தானே தனது சரிதையை எண்ணிஎண்ணித் தடிப்பாள்.

அன்று பரமபக்தன்போல் வேஷமணிந்துகொண்டு வந்த மனிதன் தன்னுடன்கூட வந்தவர்கள் தன்னை வஞ்சித்துத் தன் பொருளையே சூறையாடிச்சென்ற அதிர்ச்சியில் அவன் முற்றிலும் கலங்கிப்போய் உடனே எழுந்து தன்னிருப்பிடத்திற்கே சென்றன். ஏற்கெனவே கடன்கொடுத்திருந்தவர்கள், நடிப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த நடிகைகள், நடிகர்கள் ஒன்றுசேர்ந்து, தம்மை வேண்டுமென்று மோசம்செய்துவிட்டதாக அவர்களும்சேர்ந்து இவர்கள்மீது வாரெண்டுப் பிறப்பித்துத் தேடிக்கொண்டிருந்ததால் வீட்டிற்குவந்த அடுத்தக்ஷணமே கைதியாக்கிவிட்டார்கள்.

இவனிடம் பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டுபோனவர்களைப்பற்றி எத்தகைய தகவலும் தெரியாது ஒடிஒளிந்துவிட்டார்கள். ஏதோ சில சினிமாக்களைத்தவிர மற்ற சினிமாக் கம்பெனிகள் தடபுடலாக ஆரம்பித்துத் தடபுடலாகவே இறந்தும்

போய்விடுவதை உலகத்தில் பார்த்துள்ள பொதுமக்களுக்கு புளித்த கஞ்சிபோலவே தோன்றிவிட்டதால் அதற்குத்தகுந்தவாறே பேசிக்கொண்டார்கள் என்றாலும் இந்த சினிமாக்கம்பெனி ஆரம்பித்ததும் இதன் வளர்ச்சியும் இதன் திடீர்பிளவும், இதில் நடிகை பழிக்குப் பழிவாங்கியதும் மற்ற இதரவிஷயங்களைப் பார்த்ததும் "சரியான பாடங்கற்பித்தாள் நடிகை. வேணும். நன்றாகவேண்டும். ஒரு முதலாளிக்கு மூளைகலங்கிற்று, ஒரு டைரெக்டருக்குக் கையொடிந்தது, ஒரு நடிகைக்குக் கால்முறிந்தது. சரியான ராஜமார்க்கத்தை விட்டுச் சாக்கடையில் காலைவைத்தால் அதுகொடுக்கக்கூடிய பலனைத்தானே அதுகொடுக்கும். இனிமேல் உள்ள சிலருக்காவது புத்திவருமா! இந்தப்பாடம் உபயோகப்படுமா?"...என்று பொதுமக்கள் பலவாறுபேசிக்கொண்டார்கள் பேச்சுச் சிதறுவதுபோல் அந்தக் கம்பெனியும் சிதறிவிட்டது.

ஜனங்களுக்கு அதில் ஒரு அக்கரை இல்லாதுபோனதால் அதைப்பற்றிய வார்த்தைகள்கூட சீக்கிரமே இறந்துவிட்டன. ஸுசீலாவின் விஷயத்தில் பொதுமக்களுக்குப் பலதரம் பலவிதமாகச் சலித்துவிட்டதால் இந்தக் கம்பெனியின் சிதறலால் எத்தகைய பரபரப்போ அடிக்கடி பத்திரிகையில் எழுதி அதேபேச்சாகப் பேசச்செய்யவோ எவரும் இதில் ஒரு தனி அக்கரையே காட்டவில்லை. சங்கடப்படவுமில்லை. சந்தோஷப்படவுமில்லை. ஆனால், ஒரே ஒரு ஆத்மா, இந்த விஷயங்களை அறிந்து எப்படித்தான் பூரித்துப் புலகிதமுற்றது என்பதை அளவிட்டே சொல்லமுடியாது. அந்த ப்ரக்ருதி வேறு யாருமில்லை. தன் பெண்ணையே கண்ணாக எண்ணியிருந்து கடைசியில் அதையும் பறிகொடுத்த தீரவைராக்ய உத்தமசிகாமணியான கோவிந்தசாமியேயாகும்.

சினிமாக்காரப்பாவியான அம்ஸாதேவியிடமிருந்து நோட்டைப்பெற்று அதைக்கிழித்தெறிந்துவிட்டு ஓடியமனிதன் மறுபடியும் அந்த ப்ரதேசங்களில் காலெடுத்தும் வைக்கவில்லை. கண்காணாத இடத்திற்குப்போய்விடவேண்டும் என்று ஒரேவைராக்யம் வைத்துக்கொண்டு கால்போக்கில் நடந்துசென்றான்.

சாதாரணமான மனிதர்களே தம் உணர்வற்று நடந்துசென்றால் பஸ்ஸிலும் லாரியிலும் அகப்பட்டு விபத்துக்காளாக நேரிடும்போது ஒரு குருடன் அம்மாதிரி நடக்கையில் கேட்கவாவேணும்?

ஒரு தனிமோட்டார்கார் தலைதெறிக்க ஓடிவருகிறது. குருடனின் உள்ளம் எப்படி கரைகடந்த தாக்குதலால் துக்கத்தில் சிதறித் தத்தளிக்கிறதோ அதை எப்படிக் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அதேபோல் மோட்டாரின் நிலைமையையும் கட்டுப்பத்த முடியாது போனதால் கிழவன் மீதுபாய்ந்து அவனைக்காயப்படுத்தியதேயன்றி உயிருக்கு ஆபத்து விளைவிக்கவில்லை.

காரின் சொந்தக்காரர் கிழவனை ஆஸ்பத்திரியில் விட்டு வைத்யம் செய்தபிறகு கிழவனின் நல்லகாலமோ! அல்லது காரின் சொந்தக்காரர்களின் தருமசிந்தையோ! தெரியாது, பகவானின் சித்தம்

என்பதுதான் முடிவான தீர்ப்பு. ஆஸ்பத்ரியிலிருக்கையில் கிழவனுடைய சகல நிலைமைகளையும் கேட்டறிந்த அவர்கள் பச்சாத்தாபத்துடன் கிழவனை, 'தனிமையில் எங்குமே இனி அலையவேண்டாம் எங்கள் வீட்டிலேயே இருங்கள்'...என்றுவைத்துக்கொண்டார்கள்.

பூகம்பத்தின் நிலைமையே இங்கு கிழவனுக்கும். ஒரு விபத்துடன் ஆதரவும் கிடைத்துவிட்டது. எந்த அவயவம் இல்லாவிடினும் மகத்தான கஷ்டந்தான். எனினும் முக்யமான கண் இல்லாவிட்டால் எப்படி மனிதன் வாழமுடியும்? கண்ணில்லாதவன் எந்தவிதம் தொழில் நடத்தித் தன் வயிற்றை வளர்க்கமுடியும். அவர்கள் பிச்சை எடுத்தாலும் அதை வாங்கி சமைத்துப்போட ஒரு ஆள் தேவையல்லவா? பிச்சைபோடும் காசைப் பறித்துக்கொண்டு போகும் கேவல புத்தியுடையவர்கள்தான் அதிகமாக இருப்பார்களேயன்றி அதைக்கொண்டு அனுதாபத்துடன் உதவிபுரியும் உத்தமர்கள் இக்கலிகாலத்தில் ஏது பாவம்!

தான் எந்தவிதமான வேலையும் செய்யாமல் உட்கார்ந்து சாப்பிட கோவிந்தசாமி இசையவில்லை. அவ்வீட்டிலுள்ள இரண்டு பெண் குழந்தைகளுக்கு ஒரு அபஸ்வரக்குடுக்கை பாட்டுசொல்லிக்கொடுத்துவந்ததைக் கேட்டு அதை நிறுத்திவிடும்படிக்குக் கூறிவிட்டு, ஸரஸ்வதிதேவியின் அனுக்ரக ப்ரஸாதமாகிய சங்கிதத்தைத் தான் சொல்லிக்கொடுத்து அந்தத்தொழிலுக்கு ஊதியமாகத் தான் நிம்மதியாய் அந்த வீட்டில் ஜீவித்துவந்தான். மலையளவு பாவத்தில் கடுகளவு புண்ணியம் என்பதுபோல் கோவிந்தஸாமியின் இத்தனை துரதிருஷ்டத்திலும் இம்மாதிரி ஒரு ஆதரவு கிடைத்தது. அதிலும் எத்தகைய அழிவுமற்ற சங்கீதத்தைக்கொண்டு ஒரு கண்ணியமான தொழிலை நடத்தியே ஜீவிக்கும்படி பாக்யம் கிடைத்ததை எண்ணி உள்ளம் பூரித்தான்.

ஆனால், "பங்கஜத்தின் கதி எப்படியாகியதோ? பயித்தியக்காரியாய் எங்கு திரிந்து என்ன சங்கடப்படுகிறாளோ? இத்தனைக்கும் காரணம் ஒரு பாவிப் பெண்ணின் சண்டாளச் செய்கையின் விபரீதமல்லவா?" என்று நினைக்கும்போது அவன் இதயமே வெடித்துவிடும்போலாகிவிடும். "இனிஎதைஎண்ணி என்னலாபம்?" என்று தனக்குத்தானே தேறுதல் செய்துகொண்டு, காலத்தைச் சற்று சாந்தியுடனேயே கழித்துவந்தான்.

இந்த நிலைமையில் சில மாதங்கள் சிறிது அமைதியுடன் சென்றன. எனினும் அவன் அந்தரங்க இதயத்தில் அடிக்கும் புயலைச் சிலசமயங்களில் தாளமுடியாது தவித்துப் புலம்புவான். தற்கொலைக்குமட்டும் அவன் பலதரம் முயன்றும் அதன் மகத்தான பாபத்தை எண்ணி அதையும் அடக்கிக்கொண்டு பொறுமையை வகித்துவந்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் கடைசிவரையில் ஆத்மார்த்தகமான முறையில் உதவுவது சங்கீதம் ஒன்றுதான். அந்த அருமையான சங்கீதமல்லவா இப்போது நம்மைக் காக்கிறது"

என்று தனக்குள்தான் எண்ணிப் பூரித்து இந்த ஒரு பாக்யத்தை யாவது கடவுள் கொடுத்தாரே என்று அவன் மனம் கடவுள் கிருபையை எண்ணிப் பூரித்தது.

## 30

வருஷத்திற்கு ஒரு முறை ஸ்ரீஜயந்தி காலத்தில் பத்து தினங்கள் மிகச்சிறப்பாகத் திருவிழாவை கோபூஜாமடத்தில் நடத்துவது வழக்கம். அதுசமயத்தில் எங்குள்ள கூட்டமும் ஸ்ரீஜயந்திக்கு நான்கு தினங்கள் முன்பே வந்து கூடிவிடும். அந்த 10 தினங்களும் கோபூஜாமடம், 'தேவலோகமோ! சொர்க்க லோகமோ' என்று ஐயுறும்படியாய் அவ்வளவு ஆனந்தமயமாய் அத்புத தேஜஸுடன் விளங்கும்.

ஸுசீலா இங்கு வந்தபிறகு இதுதான் முதல் உத்ஸவமாகை யால் இங்கு ப்ரம்மாண்டமான பந்தல்களை ஒருமாதம்முன்பே போட வாரம்பித்துவிட்டார்கள். ஸுசீலாவுக்கு இங்கு நடக்கும் தடபுடல் எதிலும் மனது செல்லவில்லை. வெளிநாட்டமே தனக்கு இனி வேண்டாம். இந்த இடமும் இதே வேலையும் போதும் என்று ஒரே உறுதி வைத்துக்கொண்டுவிட்டதால் அவளுக்கு வெளி விவகாரங் களைக் காணவோ கேட்டறியவோகூட அவள் விரும்பவில்லை.

தான் செய்த மகத்தான பயங்கர பாபத்திற்குச் சரியான பரிகாரம் இதுதான் என்பது உறுதியாக மனத்தில் பதிந்துவிட்ட தால், அதற்கே அவள் உள்ளம் அடிமையாகிவிட்டது. தான் இந்த இடத்திற்கு வந்த அன்றுதான் ஸ்வாமிகளைத் தரிசித்தாளேயன்றி அதற்குப்பிறகு அவரைப் பார்க்கவேஇல்லை. பார்க்க விரும்பவும் இல்லை. தன் தொழிலைச் சீராகச்செய்வதும் நோயாளிகளை வெகு பக்ஷமாகக் கவனித்துக்கொள்வதும் ஓய்வு கிடைக்கும் நேரத்தில் கிழவியின்மூலம் உயர்ந்த நூல்களைப் படித்து ஆத்மாவுக்கு ஆகாரம் தேடுவதும் தனக்குள் சதா பகவன்நாமபஜனை செய்வதுமாகத் தன்னுடைய காலத்தை வகுத்துக்கொண்டதில், முதலில் தான் நினைத்தபடி தன் பெற்றோரைக்கண்டு ஸேவை செய்யவேண்டும் என்கிற ஆவல்கூடக் குறைந்து வைராக்யத்திலேயே ஊறிப் பரி பக்குவமடைந்துகொண்டுவந்தது.

ஸ்ரீ ஜயந்தியன்று மடத்தில் நடக்கும் அதிஆச்சரியமான உத்ஸவத்தின் வைபவத்தை லக்ஷக்கணக்கான ஜனங்கள் பேரா னந்தத்துடன் அனுபவிக்கின்றார்கள். ஆரவாரமும், வாத்யமுழக்க மும், மணிகளின் ஓசையும், பசுமாட்டுக்கழுத்துக்களில் கட்டியுள்ள மணிகள்செய்யும் அதியத்புதமான நாதத்தின் சப்தமும்கூடி மக் களைப் பூரிக்கச்செய்கிறது. கிருஷ்ண பரமாத்மாவின் திவ்யமங்கள விக்ரகத்தை ப்ரம்மானந்தமாக அலங்கரித்து ஊர்வலம் வரும்போது அந்த ப்ரதேசம் பூராவும் உள்ள அத்தனை ஜனங்களும் வந்து கலந்து கொண்டார்கள்.

ஆஸ்பத்ரியில் அடியோடு எழுந்திருக்கமுடியாத நோயாளிகளைத்தவிர மற்றவர்களும், நர்ஸ்களும் உள்பட வைபவம் நடக்கும் இடத்திற்குச்சென்று கண்டு மகிழ்ந்து வந்தார்கள். ஆனால், ஸுசீலா மட்டும் எந்த வைபவமும் தனது இருப்பிடத்திலேயே அகக்கண்ணால் கண்டுமகிழ்வதே போதுமென்று தீர்மானமாகக் கூறிவிட்டுப் போகாதிருந்தாள்.

இந்த பத்து தினங்களும் இரவு பகல் ஓயாது பூஜையும், பஜனையும் நடந்துகொண்டிருப்பது வழக்கம். முதல் நாள் பூராவும் ஸுசீலா இந்தப்பக்கமே வாராதிருந்ததை மடத்து ஸ்வாமிகள்—முக்யமாகப் பெரியஸ்வாமிகள்—முதல் கவனித்து வியப்புற்றார்கள். அத்தனை கேவலமான வாழ்க்கை வாழ்ந்தவளின் மனது இத்தனை சடுதியில் இத்தகைய விசித்திரமான மாறுதலையடைந்து வைராக்யத்தில் பதமாகிவிட்டதானது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது......என்று ஸ்வாமிகளே நினைத்து, உள்ளுக்குள் மகிழ்ந்தவாறு மறுதினம் கிழவியின்மூலம் ஒருகடிதம் எழுதியனுப்பினர்.

இதைக்கண்ட சுசீலாவுக்கு உண்மையில் தூக்கிவாரிப்போட்டு ஏதோ கலக்கமும் குழப்பமும் உண்டாகியதேயன்றி சாந்தி ஏற்படவில்லை, கடிதத்தைப் படிக்கக்கூட அவள் மனது பயந்தது. அதில் என்ன எழுதியிருக்குமோ, எத்தகைய விஷயத்தைப் படிக்கநேருமோ என்று பயந்து நடுங்கியதால், சற்றுநேரம் மவுனமாகவிருந்தாள். கடிதம் ஒரு சாதாரண ஜடப்பொருளாகத் தோன்றாமல் ஏதோ பெரிய மலையைத்தூக்கித் தன் கையில் வைத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றித் தலைசுற்றியது. எதற்கும் ஸ்வாமிகளுடைய உத்திரவாகையினால் அதைப்படித்தே தீரவேண்டும். படிக்காதிருப்பதுவும் அபசாரம் என்று தோன்றியதால் சற்று சமாளித்துக்கொண்டு கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

“ஆண்டவனருளுக்குப் பாத்திரமாகுக !

மகத்தான பாதையைக் கொடுக்கக்கூடிய கொடிய வ்யாதிகளினால் தத்தளிக்கும் மனிதர்களுக்குக் கைதேர்ந்த மருத்துவனைக்கொண்டு ஆபரேஷன் செய்துவிட்டபிறகு வ்யாதி குணமாகி மனிதன் சுக ஆரோக்யத்துடன் வாழ்வதைக் கண்ணால் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். அதேபோல் அளவிலடங்காத அக்ரமத்தைச் செய்த பழய ஜென்மம் மாறிப்போய் முற்றிலும் புதிய புனிதஜென்மம் எடுத்துத் தூய த்யாகப்பதுமையாக உன்னைக் காணும்போது ஆண்டவனின் திருவுள்ளம் கட்டாயம் பூரிக்கும் என்பதில் ஐயமில்லை. உன்னைப்பற்றிய விஷயத்தை மவுனவ்ரதம் பூண்டுள்ள கிழவியின்மூலம் சகலமும் அறிந்துகொண்டேன். தாசிகுலத்தில் பிறந்து கூறத்தரமற்ற ஊழல் நாடகத்தை ஆடி வ்யாதிப்பிண்டமாக அழுகிப்போனபிறகு புத்திவந்து இவ்விடத்தில் அண்டிப்பிழைக்கவந்து உன்னைப்போலவே இதேதொழிலைச் செய்து தனது பாதகங்களை எல்லாம் உணர்ந்து அதைப்போக்க வழியைத் தேடிக்கொள்ளும் முறையில் மவுனவ்ரதமே அதற்குச்

சரியான மார்க்கம் என்று உணர்ந்து மவுனத்யானத்தை ஆரம்பித்துச் சரியாக 30 வருஷகாலமாகிறது. அவளைக்கொண்டே சிறந்த வாக்யங்களை எழுதி அதையே மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வைத்து இந்த காரியம் நடந்துவருகிறது என்பதை நீ அறியாதிருக்கலாம். அதற்காக இதை எழுதுகிறேன். நேற்றுமுதல் நடக்கும் உத்ஸவ வைபவத்திற்கு நீ வராததையும் நாங்கள் கவனித்தோம். முக்யமாக நீ இங்கு வந்துசேர்ந்த அன்று உன்பெற்றோர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குப் பணிவிடைசெய்து உன் பாபத்தைத் துலைக்க ப்ரியப்படுவதாகத் தெரிவித்ததை இன்னும் மறக்கவில்லை. நீ சொல்லிய சகல அடையாளங்களுடனும் கூடிய கபோதியும் சிறிது மூளைகலங்கிய மனுஷியும் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள்தானா உன் பெற்றோர்கள் என்பதை நீ பார்த்து அறிந்து உன்னிஷ்டப்படி அவர்களை நீ தரிசிக்கலாம். உத்ஸவத்தையும் சேவித்து இன்புறலாம்...

என்று எழுதியிருந்ததைப் படிக்கும்போது அசையாத உறுதி கொண்ட மலைபோலிருந்த இதயம் சற்று அசைந்துகொடுத்தது. "அப்பா!...அம்மா!" என்ற சப்தம் தன்னை யறியாமல் வெளிப்பட்டது. கண்களில் அருவி பெருக்கெடுத்தது. சிலவினாடிகள் அவளைச் சித்திரவதைசெய்து வாட்டியது. தான் முதல்முதல் சினிமாராணி என்ற ஹோதாவில் கோவிலுக்குச்சென்று அங்கு தன் பிதாவைக் கபோதி பிச்சைக்காரனாகப் பார்த்ததும், பிறகு தன் தாயை சினிமாப்படம் எடுக்கையில் பயித்தியக்காரியாகப் பார்த்ததும்....திடீரென்று காலக்கண்ணாடியில் பார்த்து நெருப்பை மிதித்தவள்போல் துள்ளினாள். இத்தனை நாட்களாக அரும்பாடுபட்டுச் சம்பாதித்துக்கொண்ட உறுதியும் த்யாக வைராக்யமும் எங்கே நழுவிவிடுமோ என்று பயம் அபாரமாகத் தோன்றியது.

தரித்திரனுக்குச் செல்வம் கிடைப்பது துர்லபம். கிடைத்த செல்வத்தைக் கை நழுவவிடுவது மிகமிக எளிது. அம்முறையில் மறுபடியும் தரித்திரனாகித் தவிப்பதுபோல் தன் கதியும் ஆகாதிருக்க வேண்டுமே என்ற ஒரு எண்ணம் உண்டாகியது. அந்த வேகம் தணிவதற்குள் இதற்கொரு உறுதியான வழி செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணி உடனே ஒருகடிதம் எழுதத்தொடங்கினாள்.

"ஸ்வாமிஜியின் திருவடிகளில் நமஸ்காரம். இவ்வடிமை உண்மையில் செத்தபிணமேயன்றி உயிருள்ள மனிதர்களின் செய்கைகளுக்கு—இப்போது செய்யும் அமரத்வம் நிறைந்த தொழிலைத் தவிர—லாயக்கில்லாத சவம் என்பது தாங்கள் உணராததன்று. பெற்றோராவது? உற்றோராவது?..அந்நிலைகளைத்தாண்டி அமானுஷ்யமான புதிய நிலையை அடையச்செய்த பிறகு, இனி ஆசாபாசச்சேற்றில் காலைவைத்து நாசத்தைத்தேடிக்கொள்ள இந்த கட்டை விரும்பவில்லை. மகாசண்டாளியாகிய என்னைப்பெற்றதால் என் பெற்றோர்கள் அடைந்த சுகம் போதும். இனியும் நான் அவர்களுடைய மகள் என்பதைச் சொல்லிக்கொள்ளக்கூட

எனக்கு உரிமை இல்லை. பட்ட துன்பங்களுக்கு மத்தியில் இந்த புனித ஆலயத்தில் அவர்கள் அபாரமான சாந்தியை அடைந்து மகிழும் ஆனந்தத்தைக் குலைத்து த்ரோகியாகிய நான் அவர்களைப் பார்க்க இனி இந்தஜென்மத்தில் ஆசைப்படவில்லை. நான் இங்குவந்த அன்று இந்த பரிபக்குவம் உண்டாகாத நிலைமையிலிருந்ததால், என் வெட்கங்கெட்ட மனத்தில் அவர்களைப்பார்க்கவும் பணிவிடைகள் செய்யவும் ஆசை தூண்டியது வாஸ்தவமே. ஆனால், தங்களுடைய அபாரமான உதவியினால் நான் இன்று இத்தகைய சிறந்தநிலைமையை அடைந்து காலக்கண்ணாடியின்மூலம் உலகத்தை நன்கறியும் சக்தி சிறிது பெற்றிருப்பதால், பழய எண்ணத்தை த்யாகத்தீயில் போட்டுப் பொசுக்கிவிட்டேன். அன்று நான் எண்ணியது மிகவும் பிசகு என்பதை இப்போது உணர்கிறேன். மறந்துபோன துக்கத்தை மீண்டும் கிளறி அந்த இரு ஆத்மாக்களையும் நான் பரிபவப்படுத்தத் துணியவில்லை. என்னுடைய பாபத்தொழிலை மறுபடியும் துடங்குவதுபோலத்தான் ஆகும். என்னைக்கண்டு அவர்கள் வரவில்லை. அவர்களைக் கண்டு நான் வரவில்லை. அவர்கள் யாரோ! நான் யாரோ! ஒருபெரிய ரயிலில் ஏறும்போது ஆயிரக் கணக்கானவர்கள்தான் ஏறுகிறோம். அவரவர்கள் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கிப்போய்க்கொண்டே இருக்கும் காட்சியைப் போலத்தான் பிறவியின் தத்துவமும். இந்தப் படுபாவியைப் பிரிந்து அவர்கள் பட்ட கஷ்டத்தைச் சிறிது மறந்து சாந்தியை அடையும் புனித ஆலயத்தில் வந்திருப்பவர்களைக் குழப்பிச்சேறுக்குவது மகா பாதகம். ஆகையால், இனி அந்த ஆசை என்னைவிட்டொழிந்து விட்டது. புண்பட்டமனத்தை இனிநான் கலக்கிக்கொள்ள விரும்ப வில்லை. தயவுசெய்து இவ்வடிமையை எக்காரணம் பற்றியும் இந்த இடத்திலிருந்து மாற்றவுங்கூடாது. இந்த முகமூடி உடையைக் களையவுங்கூடாது. இங்கிருப்பதை அந்த அபாக்யப்பிறவிகளுக்கு அறிவிக்கவும்கூடாது. அவர்களைக் கருணைகூர்ந்து இதேஇடத்தில் வைத்திருந்து அவர்களுடைய இதயப்புண்ணை ஆற்றி ஆதரிக்க வேண்டுமாய் மிகமிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். நான் இங்கிருப்பதை அவர்கள் எந்தவிதத்திலும் அறியச்செய்யக் கூடாது என்பதைத் தங்கள் திருவடிகள்மீது ஆணையிட்டு ப்ரார்த்திக்கின்றேன்.

என்னுடைய பாழும் பிறவியின் சரித்திரத்தை ஒருவாறு உலகமே மறந்திருக்குமென்று நம்புகிறேன். இந்நிலைமையில் சில சினிமாக்கார அல்பர்களைப்போல், தம் மானங்கெட்ட செய்கைக்கும் ஒரு சிகரம் வைத்ததுபோல் தமது ஊழல்களைப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்வதும், வழக்குகள் தொடுப்பதும், மனைவி என்னைப் பிரிந்துவிட்டாள் என்று கணவனும், கணவனிடம் என் குழந்தையை விடமாட்டேன் என்று மனைவியும், பெற்றோர்கள் வேறு குறுக்கிட்டு ரஸாபாஸம்செய்வதையும் நான் ஊழல்பிண்டமாக இருந்தநாளையில்கூட நான் அதைவிரும்பாது வெறுத்தேன்.

அம்மாதிரியான நிலைமை என் வாழ்நாளிலும் வராது தடுத்துக் கொண்டு மிச்சநாட்களையும் பகவானிடம் நல்லமுறையில் கழித்து ஒப்புவிக்கவேண்டுமேயன்றி பழயகுப்பையைக் கிளற நான் ப்ரியப் படவில்லை. அப்படி என்னை யாராவது காட்டிக்கொடுத்து அவர்களையும் கிளறிவிட்டு மறுபடியும் இந்த ஊழல் புராணத்தின் கிளைகள் பரவிச் சிரிக்கும்படி நேரிடுமாயின் கட்டாயம் நான் தற்கொலையே புரிந்துகொள்வேன். இது சத்யம். நான் இப்படி ஆசாரியன் கட்டளையை மீறி நடப்பதற்காக மன்னிக்கக் கோருகிறேன். நான் இருக்கும் இடத்திலிருந்தே உத்ஸவங்களைக் கண்டு மகிழ்வேன். இதோடு இந்தவிஷயம் மறந்துவிடுவது தேவலை. அந்த அம்மாளைப்போல் நானும் மவுனவ்ரதமே கொள்ளத்துணிந்து சில தினங்களாக நோயாளிகளிடம் தவிர மற்றவர்களிடம் பேசுவதில்லை. இந்தநிமிடம் முதல் நிச்சயமாக மவுனவ்ரதமே எடுத்துக் கொண்டுவிட்டேன். மன்னிக்கவும். அடிமை..."

என்று விருவிரென்று எழுதி உடனே மவுனக்கிழவியின்மூலம் கொடுத்தனுப்பிவிட்டாள். அதன்பிறகே அவளுக்கு ஒரு பெரிய பாரம் குறைந்ததாகச் சற்று சாந்தி உண்டாகியது.

## 31

உத்ஸவ வைபவத்தின் ஆனந்தத்தை அனுபவிக்கும் ஒவ்வொருவருடைய உள்ளமும் தன்னைமீறி இன்பக்கடலில் மூழ்கி ஆனந்தம் அலைமோதியது. வருஷாவருஷம் இம்மாதிரி ஒரு வைபவம் நடைபெறுகிறது என்பதைக் கேள்விப்பட்ட கிருஷ்ணமூர்த்தி, பங்கஜத்திற்கும் சாரதாம்பாளுக்கும் சற்றுமாறுதலும் மனஆறுதலும் உண்டாவதற்காகவே இங்கு அழைத்துவந்தார். முன்னொரு தினம் கோயில் களவு விஷயத்தில் சாரதாம்மாள் கவலைப்பட்டது போலவே சுந்தரத்தின் கோஷ்டியே இத்தகைய சண்டாள காரியத்தைச்செய்து மறுபடியும் சிறைபிடிக்கப்பட்டதைக் கேள்விப் பட்டதனால்தான் சாரதாம்பாளின் உள்ளம் உருகிவிட்டது.

என்ன தேற்றியும் தேறுதநிலைமையில், இத்தகைய வைபவத்திலாவது கொண்டு சற்று திருந்தச்செய்யலாம் என்ற எண்ணத்துடன் வந்து கலந்துகொண்ட இடத்தில் கோவிந்தசாமியின் பரிதாப பிம்பத்தை அங்குக் கண்டதும் பின்னும் மனது கலங்கியது. கபோதியான கோவிந்தசாமியைப் பார்த்த பங்கஜம் "ஆ!... அவர் ...ஸாரதாம்பா... அதோ பாரு...என்று கத்தியவாறு கும்பலைத் தாண்டிக்கொண்டு ஓடினாள். தன்னை மறந்து கானாம்ருதத்தில் ஈடுபட்டிருந்த கோவிந்தஸாமியும் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவரையொருவர் சந்தித்துச் சகல விஷயங்களையும் பேசிப்பேசி ஆறுதலடைந்த சமயம் பங்கஜமும் வந்துசேர்ந்து கலந்துகொண்டாள்.

இனிமேல் இந்த நிர்மலமான இடத்தைவிட்டுப் போகக் கூடாது—என்கிற சங்கல்பத்தையே எல்லோரும் செய்துகொண்டார்கள். இனி அதிகம் கூறுவானேன்? புண்பட்ட மனத்திற்கு

இந்த இடம் பரம அவுஷதம்போலும், வரண்டு இருண்டுபோன இதயங்களுக்கு இந்த ஆனந்தகரமான இடம் அபாரமான ஜோதி போன்றும் தோன்றியதால் தம் தம் துக்கங்களை மறந்து உத்ஸவத்தில் லயித்துப்போனார்கள். பாபங்களைக்கரைக்கும் பகவன்நாமமும் பகவத்தரிசனமும் ஒன்றுகிடைத்தபோது அவர்கள் மனம் பண்பட்ட முறையில் மாறுவது சகஜமல்லவா?

அதே இரவில் ஸுசீலா எழுதியனுப்பிய கடிதம் ஸ்வாமிகளிடம் கிடைத்ததும் அதைப்படித்த முற்றுந்துறந்த முனிவராகிய அத்தகைய மகானே ஒருக்ஷணம் ப்ரமித்தார் என்றால் வேறு சொல்வதற்கு என்ன இருக்கிறது? 'எத்தனை சடுதியில் மனம் ஆதியில் கலங்கிக் குப்பையில் வீழ்ந்ததோ அதேபோல் இத்தனை சடுதியில் வைராக்ய அக்னிப்ரவேசம் செய்து பக்குவமடைந்ததானது மிகவும் போற்றக்கூடிய விஷயமாகும். ஆதிமுதல் எத்தனையோ விஷயங்களைப்படித்தும் கேட்டும் மனதிற்கு உரமிட்டுத்தேறிய நம்முடைய மனதிற்குக்கூட நிலைத்த வைராக்யத்தைத் தேடிக்கொள்ள வெகுநாட்களாகியதே! அடாடா! என்ன ஆச்சரியமான பிறவி! முதலிலிருந்தே நல்லமுறையில் பழகி நல்லமார்க்கத்தில் ப்ரவேசித்திருந்தால் இந்த கதியை அடைந்திருப்பாளா! உம். விதி என்பது யாரைவிட்டது?' என்று நெடுமூச்செறிந்து வியப்புக்கடலாடினார்.

இக்கடிதத்தை இதர ஸ்வாமிகளிடம் காட்டித் தமக்குள் மிகவும் ஆச்சரியப்பட்டுப் பூரித்தார். அவர்களில் ஒரு ஸ்வாமி மற்றவர்களைப்பார்த்து "ஸ்வாமி! சென்றவருஷம் இறந்துவிட்ட நமது சன்யாசினியின் பீடம் இன்னும் சரியான வியக்தி கிடைக்காததால் காலியாபிருக்கிறதல்லவா?"......என்று கூறி முடிப்பதற்குள் பெரிய ஸ்வாமிகள் சிரித்துக்கொண்டே "தயானந்தா! உன் கருத்தை உணர்ந்தேன். ஆனால் அந்த எண்ணம் பலிக்காது என்பதை இக்கடிதத்தின் ஒவ்வொரு அக்ஷரமும் வீரமுரசடித்துக் கூறுவதை நீ பார்க்கவில்லையா! அந்தபீடத்தை அலங்கரிப்பதற்குச் சரியான யோக்யதாம்சம் இவளிடமிருப்பதை நாம் அறிவோம். இருப்பினும் எந்த ஒரு துராசையின் வேகத்தில் தனது ஸ்த்ரீதர்மத்தைப் பொசுக்கிவிட்டுத் தானும் பஸ்மமாகிவிட்டாளோ, அதே மனுஷி அதே உள்ளத்திலிருந்து அந்த ஆசை என்கிற பதத்தை வேரோடு பெயர்த்து எறிந்துவிட்டாள். அவளை என்னதான் வேண்டினாலும் இந்தப்பட்டத்திற்கு அவள் கட்டாயம் வரவே மாட்டாள் என்பது இக்கடிதமே கண்ணாடிபோலக் காட்டுகிறது...

என்றுமுடிப்பதற்குள் தயானந்தர்....'குருதேவா! ஒருமுறை முயற்சிசெய்து பார்த்துவிட்டால் தேவலையல்லவா!" என்றார்....

"சரி அந்த பரிக்ஷையை நீயே நடத்திப்பார்க்கலாம்" என்று பெரிய ஸ்வாமிகள் உத்திரவுகொடுத்துவிட்டார். உடனே தயானந்தர் பின்வருமாறு கடிதம் எழுதினார்.

"தாயே! கடிதங்கண்டு பரமசந்தோஷமடைந்தோம். ஆடவர்களுக்குக்கூட இத்தனை விரைவில் சித்திக்காத பேறு தமக்கு எளிதில்

சித்தித்துக் கைகூடிவிட்டது. தங்கள் ப்ரியப்படி எந்த ரகஸியத்தையும் வெளியிடமாட்டோம். நமது கோபூஜாமடத்தில் சன்யாசினியின் பீடம் காலியாக இருக்கும் விஷயம் தாமறிந்திருக்கலாம். அப்பீடத்தைத்தாம் அலங்கரித்து அதன்மூலம் ஸ்த்ரீ தர்மங்களையும் த்யாக உணர்ச்சிகளையும் உபதேசமூலம் வளர்க்கவேண்டுமாய் மடத்திலுள்ளஸ்வாமிகள் ப்ரியப்படுவதால் அதற்கிசைவீர்களென்று நம்பப்படுகிறது" என்று மவுனக்கிழவிமூலமே எழுதி அனுப்பினர்.

அடுத்தக்ஷணமே பதிலும் கிடைத்தது. அதைப்பிரித்ததும் கடிதத்தை எரித்திருக்கும் சாம்பலும் ஒருசிறிய துண்டில் "கடிதம் எரித்த சாம்பரே பதிலளிக்கும்" என்று எழுதியிருந்ததைப்பார்த்த பெரியஸ்வாமிகள் புன்னகைபூத்த வதனத்துடன் மற்றவர்களை நோக்கினர். கந்துகமதக்கரியை வசமாய்நடத்தலாம் என்று முன்னோர்கள் தெரியாமலாசொன்னார்கள்? ஆசையையும் ஆசையினால் தூண்டப்படும் உணர்ச்சிக்கனலையும் அடக்கி ஜெயிப்பது என்பது எத்தகைய ச்ரமசாத்தியமான காரியம்? இளம்பேதை இத்தகைய வைராக்ய அக்கினியில் குளித்து ஸ்புடம்வைத்ததுபோல் த்யாகப் பதுமையாய் விளங்குகிறவளை நாம் ஏன் கெடுக்கவேண்டும்? இதே சன்யாசினி பீடத்திற்கு லாயக்காக்குவதற்காகவே எத்தனையோ பேர்களை நான் கூர்ந்து கவனித்தேன். தகுதி போதாது என்றதையறிந்துதான் வாளாவிருக்கிறேன். இந்த எண்ணத்தை இதோடு விட்டுவிடுவோம். அதிகமாகச்சொன்னால் ஹானியில் முடியும்". என்று எல்லோரும்பேசித் தீர்மானித்துக்கொண்டார்கள்.

"குழந்தாய்! சந்தோஷம். நீ பிறந்து இன்னும் ஒரு வருஷங்கூட ஆகவில்லையெனினும் ஆயிரங்காலத்திற்குமுன்பு பிறந்தவர்கள் அறியும் அபூர்வ விஷயங்களைக்காட்டிலும் நீ அதிகம் அறிந்துகொண்டிருப்பதைக்காண உள்ளம் பூரிக்கிறேம். மனித எண்ணங்களையும், மனித எல்லைகளையும் தாண்டி எத்தனையோ காதத்திற்கு அப்பாற்பட்ட எண்ணங்களும் எல்லைகளுமாகும் கடவுளுடையது. ஆசைப் பிசாசை அழித்து ஆணவப்பேயை ஓட்டி, மனக்குரங்கைச் சரியான கடிவாளத்தில் போட்டுக்கட்டி நிலைநிறுத்தினாலன்றி அந்த மாயாவியின் விசித்திரத்தை மனிதர்களால் அறியமுடியாது. இந்த தத்துவத்தை நீ விரைவில் அறிந்துகொண்டதால் உன் விருப்பப்படியே நடக்க ஆக்ஷேபனையே இல்லை, சத்தியமே ஜெயம்."

என்று எழுதப்பட்ட கடிதத்தைக்கண்டதும் இத்துறவியின் இதயத்தில் ஆனந்தம் கரைபுரண்ட வெள்ளம்போல் பெருக்கெடுத்தது. அப்பெருக்கு கண்களில் பெருகியது. "இதைவிட நித்யமங்கள கல்யாண வைபவ சுகம் வேறு என்ன இருக்கிறது? நானே க்ருதார்த்தமடைந்த பாக்யசாலி [illegible]தருக்கு ஜெய்...சமஸ்த பக்தர்களுக்கு ஜய்" என்[illegible] வாய் முணுமுணுத்[illegible]. கரங்கள் சிரமேல் கூடிக் குவிந்[illegible] அசையா நிலைபெற்[illegible] மங்களம்.

சுபம்.

1845

## உலகம் கண்ட நல் நாட்கள்

### வைகாசித் திங்கள்

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மை மண்ணுலகோர் தாம் அறியத் தீது அகல நிற்கும் திரு.




இந்த மாதத்தில் ஆழ்வார் ஒருவரும் ஆசார்யர்கள் ஐவரும் அவதரித்து உள்ளனர்.

வைகாசி விசாகத்தில் வந்துதித்தருளியவர் காரிமாறன் சடகோபன் என்னும் நம்மாழ்வார். ஆசார்யர்களுள், ரோகிணியில் திருக்கோட்டியூர் நம்பிகளும், கேட்டையில் திருவரங்கப்பெருமாள் அரையரும், அனுஷத்தில் இரட்டையர்களாகப் பட்டரும் சீராமப்பிள்ளையும், விசாகத்தில் திருவாய்மொழிப்பிள்ளையும் திருவவதரித்தனர்.

நம்மாழ்வார் நமது ஸித்தாந்தத்திற்கே உயிர்நாடி. குலபதி என்றும் ப்ரபன்னஜனகூடஸ்தர் என்றும் போற்றி அழைக்கப் படுபவர். 'சித்து அசித்தொடு ஈசனென்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவு கண்ட சதுர்மறைப் புரோகிதன். நான்கு வேதங்களையும் திருவிருத்தம், பெரியதிருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி என்னும் நான்கு இன்தமிழ் ப்ரபந்தங்களாகப் பாடியருளியவர். மதுரகவியாழ்வார் "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற ப்ரபந்தத்தில் இவ்வாழ்வார் பெருமையை அழகு பெறச் சிறப்பித்திருக்கிறார். கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வார் நூறு கலித்துறைகளால் "சடகோபரந்தாதி" என்னும் நூலில் பரக்கக் கொண்டாடியுள்ளார். இவரைத் தமிழ்த் தெய்வமாகப்போற்றிப் பணிந்த 96-வகை ப்ரபந்தங்களாலும் புகழ்ந்துள்ளனர் என்பர்.

"ஏரார் வைகாசி விசாகத்தின் ஏற்றத்தைப்
பாரோர் அறியப் பகருகின்றேன்—சீராரும்
வேதம் தமிழ்செய்த மெய்யன் எழில் குருகை
நாதன் அவதரித்த நாள்!"

"உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பு ஒருநாள்
உண்டோ சடகோபர்க்கு ஒப்பு ஒருவர்—உண்டோ
திருவாய் மொழிக்குஒப்பு தென்குருகைக்கு உண்டோ
ஒருபார் தன்னில்ஒக்கும் ஊர்!"

— ஸ்ரீ வைஷ்ணவதாஸன்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI
MMAL is printed and published by V. M. PARTHASARATHY
the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
anaging Editor: V. M. SRINIVASAN, M. A., B. L.,

## அடுத்த இதழில்
## புதிய கதை ஆரம்பம்

★

# ஜயபேரிகை

வை. மு. கோ. 86-வது நாவல்

கல்யாணம்! கல்யாணம்! என்ன! என்ன! கல்யாணமா! யாருக்கு? எப்போது? எங்கே?.. ஊர்பூராவும் இதேபேச்சுதான். அதோ! மேளம்கேட்கிறதே!... அடாடாடா!... தம்பதிகளின் ஜோடியைக்கண்டு ஊரே திகைக்கிறது. அந்த தம்பதிகள் யார்? ஏன் இப்படி வியப்புறவேண்டும்? கலாவதி யார்?......தேவராஜன் யார்?.....காதலுக்காகக் கல்யாணமா?...பணத்திற்காகக் கல்யாணமா?...விச்வநாதசர்மாவின் விநோதப்போக்கை ஏன் உலகம் கண்ணிமைக்காமல் பார்க்கிறது?...என்ன!... கொள்ளைக்கூட்டத்தினரா!.... லஞ்சப் பேயின் தாண்டவமா?... கள்ளமார்க்கெட்டின் பலன் எது?...தந்தைக்கு மகனும், மகளும் புத்தி கற்பிக்கின்றார்களா?......அத்தகைய வீர ரத்தினங்கள் யார்?...எந்த காரியத்திற்கும் வெற்றி முழக்கமும் ஜயபேரிகையும் உண்டு. இப்போது யாருடைய தீரச்செயலுக்கு ஜயபேரிகை அடிக்கப்போகிறது? கல்யாணத்திற்கா? கடமைக்கா? பிறர் மெச்சுவதற்கா? ஆத்மார்த்த லக்ஷியத்திற்கா? பரோபகாரத்திற்கா? சுயநலச் செய்கைக்கா?...தொடர்ந்து படித்தால்தானே தெரியும்.

மோகினி தரும் புதிய விருந்தின் சுவையை ஜூலை இதழில் எதிர்பாருங்கள்.

★

## ஏஜண்டுகளில்லாத ஊர்களில்

அடுத்த இதழ்முதல் —"ஜயபேரிகை" ஆரம்பத்திலிருந்து— மோகினியை வினியோகிக்க, நாணயமுள்ள

## ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு உடனே எழுதுக:

**ஜகன்மோகினி காரியாலயம்**

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி. சென்னை 5.